# 32 வது

# ஆண்டறிக்கை 2021-2022

திருத்தந்தை
**பிரான்சிஸ்**

மக்கள் ஆயர்
**அ. நீதிநாதன்**

சமத்துவ சமதர்ம சமுதாயத்தை உருவாக்கிட...

# சி.ஆர்.டி.எஸ் நிர்வாக குழு

| வ.எண் | பெயர் | முகவரி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1 | **மேதகு.ஆயர்.நீதிநாதன்** | செங்கல்பட்டு மறைமாவட்டம், ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603101. | நிறுவன தலைவர் |
| 2 | **அருட்பணி.** ஜான்போஸ்கோ | செங்கல்பட்டு மறைமாவட்ட பொதுபதில் குரு, ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603101. | துணைத்தலைவர் |
| 3 | **அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்** | செங்கல்பட்டு மறைமாவட்ட பொருளாளர், ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603101. | பொருளாளர் |
| 4 | **அருட்பணி. அந்தோணிராஜ்** | சி.ஆர்.டி.எஸ் இயக்குனர், செங்கல்பட்டு கிராமப்புர மேம்பாட்டுச் சங்கம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603101. | இயக்குனர் மற்றும் செயலாளர் |
| 5 | **திரு. செல்வராஜ்** | ஆர்.என்.கண்டிகை கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் | உறுப்பினர் |
| 6 | **திருமதி. ஸ்டெல்லா** | நெ.14/2, செல்லியம்மன் தேரடி தெரு, மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் - 603306 | உறுப்பினர் |
| 7 | **அருட்பணி.மரியஅன்பு** | புனித பிரான்சிஸ் சேவியர் ஆலய பங்கு தந்தை, நெ.2/110, மாதா கோவில் தெரு, மதுவந்தாங்கல், காஞ்சிபுரம் மாவட்டம் - 603204 | உறுப்பினர் |
| 8 | **சகோதரி. பிரியா** | புனித மரியாள் கன்னி மடம், செங்கல்பட்டு - 603101 | உறுப்பினர் |
| 9 | **திரு. அந்தோணிதாஸ்** | நெ.55, விப்பேடு, மேல்கதிர்பூர், காஞ்சிபுரம் மாவட்டம் - 603502 | உறுப்பினர் |
| 10 | **திருமதி. கீதா** | நெ.584/3, பாலமுருகன் தெரு, இருங்குன்றப்பள்ளி, செங்கல்பட்டு மாவட்டம் - 603 002 | உறுப்பினர் |
| 11 | **திரு. பெஞ்சமின்** | நெ.74, புலிப்பாக்கம், தந்தை பெரியார் தெரு, செங்கல்பட்டு - 603 002 | உறுப்பினர் |

# இயக்குனர் உரை:

அன்பான அருட்தந்தையர்களே!
அருட்சகோதரிகளே! நண்பர்களே!
தோழர்களே! மற்றும் உபகாரிகளே!
அனைவருக்கும் வணக்கம்.

நமது அண்டவர் இயேசு கிறிஸ்து தந்தையாகிய இறைவனின் அச்சுப்பிரதியாக, இரக்கமுகமாக, வாழ்வின் சுனையாக, மன்னிப்பின் உறைவிடமாக, பங்காளராக, எப்போதும் நம்முடன் இருக்கும் இம்மானுவேல் தெய்வமாக, இறுதியில் நிலைவாழ்வைத் தரும் நம்பிக்கை நட்சத்திரமாக இவ்வுலகிற்கு வந்தவர். அன்பு என்ற மையப்புள்ளியில் தான் இந்த உலகம் சுழன்றுக் கொண்டிருக்கின்றது. அன்பு என்ற வாழ்வியல் நெறியில், சிந்தனையில், வாழ்வியல் செயல்பாடுகளில், உணர்வுகளில், உணர்ச்சிகளில், மனித வாழ்க்கை அர்த்தம் பெறுகிறது, நிறைவை எய்துகிறது என்பதை போதித்தது மட்டுமல்லாமல், அவர் அதைத் தன் வாழ்க்கையில் முழுமையாய் வாழ்ந்தவர்.

அவர் கடவுளின் நிறைவாய் இவ்வுலகிற்கு வந்தவர். குறை என்பது அவரிடத்தில் இல்லை. தம்மிடம் நம்பிக்கை கொண்ட யாவருக்கும் தமது நிறைவான அருளை வழங்கி குறைகளைப் போக்கியவர். அனைத்து மனிதர்களையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளியாக அவர் இந்த உலகிற்கு வந்தார். இந்த உலகினருக்கு தான் யார் என்பதை அறிமுகப்படுத்தியபோதும் "வழியும், உண்மையும், வாழ்வும் நானே" என்று வெளிப்படையாய் அதிகாரப்பூர்வமாய் வெளிப்படுத்தினார். தன்னிடத்தில் நம்பிக்கைக் கொண்டு வந்தவர்கள் பலருக்கு கலங்கரை விளக்கமாக வாழ்வுக்கான வழியைக் காட்டினார். தன்னுடைய உண்மையான மதிப்பீடுகளாலும், வாழ்வியல் நெறிமுறைகளாலும், உண்மைக்கு சான்று பகர்ந்தார். வாழ்விழந்த அநேக மக்களுக்கு வாழ்வளித்தார். நான் வாழ்கிறேன் என்னில் நம்பிக்கை கொண்டுள்ள நீங்களும் வாழ்வீர்கள் என்ற நம்பிக்கையை தனது நம்பிக்கையாளர்களின் இதயங்களில் விதைத்தார். தேவையில் இருப்போருக்கு உதவும்போதும், அழுகின்ற கண்களின் கண்ணீரைத் துடைக்கின்றபோதும், நம்பிக்கை இழந்த கரங்களை வலுப்படுத்தும் போதும், தங்களை மறந்து, தங்களின் நலன்களை இழந்து அடுத்தவரின் நலன்களில் அக்கறை கொள்ளும்போதும், நம் வாழ்க்கை அர்த்தப்படுகிறது என்பதை தன்னுடைய வாழ்வு முழுவதும் வாழ்ந்துக் காட்டியவர்.

# இயக்குனர் உரை...

இவருடைய அன்புப் பணிகளை தன்னுடைய பணிகளாக ஏற்று இன்னமும் சிறிதும் தொய்வில்லாமல் வாழ்வளிக்கும் பணிகளை சீரிய சிறப்புடன் இவ்வுலகிற்கு சிறப்பாக செய்து வருகிறது நம் அன்னையாம் திருச்சபை. இயேசுவின் போதனைகளையும், கொள்கைகளையும் திருச்சபையின் போதனைகளாக கொள்கைகளாக ஏற்று, மக்களுக்கு போதித்து, இன்றளவும் கடைபிடித்து செயல்படுத்தி வருவதை திரு அவையின் போதனைகளிலும், திருத்தந்தையர்களின் திருமடல்களிலும் நாம் வாசிக்கின்றோம். இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது செய்த, உண்மையை உணர்த்தும் பணிகளையும், வழிகாட்டும் பணிகளையும், வாழ்வுதரும் பணிகளையும் இன்றளவும் திருஅவை முனைப்போடு செய்துக்கொண்டு வருகின்றது.

நமது கத்தோலிக்க திருஅவையின் பாரம்பரிய வழியில் இயேசுவின் பணிகளை "இலக்கு மக்கள் தோழமையில் இறையாட்சி பயணம்" என்ற இலட்சிய வாக்கோடு செய்துக் கொண்டிருக்கும் நமது செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயரும், செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கமும் நமக்கு இறைவனின் பேரருள், பேராசீர், தமிழக திருஅவையில் ஏராளமான ஏழை, எளிய, நலிந்த விளிம்புநிலை மக்களை உள்ளடக்கி அனைத்து தரப்பு மக்களுக்கும் பணிபுரியும் நிறுவனம் நமது செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கமாகும். திருவிவிலியத்தில் எபிரேயருக்கு எழுதப்பட்ட புத்தகம் 2-ஆம் அதிகாரம், 11 வது வசனத்தில் நாம் இவ்வாறு காண்கிறோம், "தூய்மையாக்குகிறவர், தூய்மையாக்கப்படுவோர் அனைவருக்கும் உயிர்முதல் ஒன்றே. இதனால் இயேசு இவர்களை சகோதர சகோதரிகள் என்று அழைக்க வெட்கப்படவில்லை". எனவே இவ்வுலகில் வாழும் நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகள், சகோதர சகோதரிகள், ஒருதாயின் பிள்ளைகள் என்பதை உணர்ந்து ஏழை எளியவர்களுக்கும், தேவையில் இருப்போருக்கும், வாழ்விழந்தவர்களுக்கும், அடிமைப்பட்டு கிடப்பவர்களுக்கும், நோயில் தனிமையில் இருப்பவர்களுக்கும், நம்மாலான உதவிகளை இன்முகத்தோடு செய்வோம். "நீதிவழி நிறைவாழ்வு" என்ற விருதுவாக்கோடு, இம்மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பு மக்களுக்கும் செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் மூலமாக நிறைவாழ்வு அளிக்க சமூக கரிசனையோடு பல முயற்சிகளை மேற்கொண்டுவரும் நம் ஆயரின் சமூக அக்கறையை பாராட்டுவோம். அவரோடு இணைந்து உழைக்கின்ற அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், நிறுவன பணியாளர்கள், உபகாரிகள், பயனாளர்கள் அனைவரையும் வாழ்த்துவோம். அனைவரும் இணைந்து நம் மறைமாவட்டம் மென்மேலும் வளரவும், இலக்கு மக்கள் நிறை வாழ்வு பெறவும், இறையாட்சி இம்மண்ணில் மலரவும், ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை வாழ்வு பெறவும் நம் மறைமாவட்ட ஆயரோடு சேர்ந்து உழைப்போம். ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் துணைநிற்க்கும் இறைவன் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

விளிம்புநிலை மக்களை வலிமையாக்கும் பணியில்

**அருட்தந்தை. முனைவர். இ. அந்தோணிராஜ்**

(M.A.(Socio), M.Sc (Psy), M.A.(C.D), M.Ed.(Edu), MSW.(C.D), Ph.D.(Socio).

இயக்குநர் மற்றும் செயலர்

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டு சங்கம்

# 32 வது ஆண்டறிக்கை

## [01.04.2021 முதல் 31.03.2022]

முன்னுரை:

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் 1990-ம் ஆண்டு அரசின் சமூக சங்கங்களின் சட்டவிதிகளின்படி முறையாக பதிவு செய்யப்பட்டு கடந்த 31 ஆண்டுகளாக காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள கிராமப்புற ஏழை மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை மேம்பாடு அடைய பல்வேறு சமூகப்பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றது. மேலும் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள நலிவடைந்த மக்கள் மற்றும் தலித் மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காகவும், அவர்களுடைய வாழ்க்கையில் அவர்கள் தன்மானத்தோடும், தன்னிறைவோடும், தன்னாட்சியோடும் வாழச் செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு 10 ஒன்றியங்கள், 155 குக்கிராமங்கள், 570 மகளிர் குழுக்கள், 75 மாற்றுத்திறனாளி குழுக்கள் என 7681 மகளிர் குழு உறுப்பினர்களையும், 946 மாற்றுத்திறனாளி குழு உறுப்பினர்களையும் வழிநடத்தி வருகின்றது. மேலும் அவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி, வருமான பெருக்கு திட்டப்பயிற்சி, சுயதொழில் பயிற்சி என பல்வேறு பயிற்சிகளையும் அளித்து ஊக்குவித்தும் வருகின்றது. சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக கடந்த ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரையிலான பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் பற்றிய அறிக்கையினை உங்கள் முன்வைப்பதில்

குறிக்கோள்:

**தன்மானம், தன்னிறைவு, தன்னாட்சி**

### சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தளங்கள்:

**மாவட்டங்கள் : செங்கல்பட்டு, காஞ்சிபுரம்**

### ஒன்றியங்கள் :

- திருப்போரூர்
- திருக்கழுக்குன்றம்
- காஞ்சிபுரம்
- வாலாஜாபாத்
- உத்திரமேரூர்
- அச்சிறுப்பாக்கம்
- மதுராந்தகம்
- காட்டாங்கொளத்தூர்
- இலத்தூர்
- சித்தாமூர்

# சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

- காரிதாஸ் இந்தியாவின் சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத்திட்டம் (Caritas India-CMDRR)
- கோல்பிங் இந்தியா திட்டம் (Kolping India)
- புதிய கண்ணோட்டம் (New Thrust)
- நாபின்ஸ் நுண்கடன் திட்டம் (Nabfins)
- இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தின் குழு காப்பீட்டுத் திட்டம் (LIC)
- சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம் (Community Based Rehablitation)
- காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் – புற்றுநோய் விழிப்புணர்வு திட்டம் (Cancer Awareness)
- பெண்கள் கூட்டமைப்பு (Women Federation)

## 1. காரிதாஸ் இந்தியாவின் சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத்திட்டம் - (Caritas India-CMDRR)

பேரிடர் காலங்களில் மக்கள் தாங்கள் வாழுகின்ற இடத்திலுள்ள சாதக பாதக சூழலை பற்றிய விழிப்புணர்வை பெற வேண்டும், சமுதாயத்தின் வளர்ச்சி மீதான அக்கறை இருக்க வேண்டும், சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும், இயற்கையின் மீது மக்களுக்கு அக்கறை உருவாக்க வேண்டும் என்கிற உன்னத நோக்கத்தில் உருவானதே சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத்திட்டம் - (Community Management Disaster Risk Reduction Programme).

இத்திட்டத்தின் வழியாக 25 கிராமங்களை தேர்வு செய்து இக்கிராமங்களில் உள்ள மக்களுக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்பு பயிற்சிகள், இயற்கை வேளாண்மை பயிற்சிகள், சாதக பாதக சூழ்நிலையை புரிந்துகொள்ள கிராம வரைபடம் வரைதல், மரக்கன்றுகள் வழங்குதல், வாழ்வாதாரத்தை பெருக்குவதற்காக வருமான பெருக்குத் திட்டத்திற்கு உதவி செய்தல், நெகிழி (பிளாஸ்டிக்) விழிப்புணர்வு மற்றும் எவ்வாறு அரசு திட்டங்களை முறையாக பயன்படுத்துதல் போன்ற பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

கொரானா நோய்த்தொற்றின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்த நிலையில் இத்திட்டத்தின் செயல்பாடுகள் சரிவர மக்களிடையே செய்யமுடியாத காரணங்களாலும் மக்களுக்கு போதிய உணவுப்பொருட்கள் கிடைக்கப்பெறாத சூழ்நிலையில் இத்திட்டத்தினை செயல்படுத்தப்படுத்த முடியவில்லை. எனவே காரிதாஸ் இந்தியா நிறுவனத்திற்கு சி.ஆர்.டி.எஸ் நிறுவன இயக்குநர் அனுப்பிய கடிதத்தின் பெயரில் இத்திட்டத்தினை கொரானா நிவாரண திட்டமாக மாற்றிக்கொள்ளலாம் என வேண்டுகோள் விடுத்தார். காரிதாஸ் நிறுவனமும் சி.ஆர்.டி.எஸ்-ன் வேண்டுகோளை ஏற்று அனுமதி அளித்தது.

02.06.2021 அன்று கொரானா நிவாரண திட்டம் திட்டமிடல் கூட்டம் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தில் திரு. ஜான் ஆரோக்கியராஜ் காரிதாஸ் மண்டல ஒருங்கிணைப்பாளர் அவர்களால் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் பயனாளிகளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது, பயனாளிகளின் விவரம், உணவுப்பொருட்களை எவ்வாறு வாங்குவது போன்றவற்றை இயக்குநர் மற்றும் பணியாளர்களோடு கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்நிலையில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனமானது செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் விளிம்பு நிலையில் தேவையில் உள்ள மக்களை தேடிச்சென்று அவர்களுக்கான மீட்புப்பணிகள் மற்றும் கொரானா நிவாரணப்பொருட்கள், உணவு வழங்குதல், ஆலோசனை மற்றும் உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்துதல், பல்வேறு நிலைகளில் விழிப்புணர்வு பயிற்சிகள், தடுப்பூசி குறித்த ஆலோசனைகள் போன்றவற்றை உடனடியாக வழங்கியது. இத்திட்டத்தின் வழியாக 2520 பயனாளிகளுக்கு அரிசிப்பொருட்கள், மளிகைப்பொருட்கள், முககவசம், சானிடைசர் போன்ற நிவாரணப் பொருட்கள் ஒன்றியங்கள் வாரியாக வழங்கப்பட்டது. பயனாளிகளின் விவரம் பின்வருமாறு.

### 1. பயனாளிகளின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | ஒன்றியங்கள் | அரிசிப் பை பெற்றவர்கள் | மளிகைப் பொருட்கள் பெற்றவர்கள் | பாதுகாப்புப் பொருட்கள் பெற்றவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | அச்சிறுப்பாக்கம் | 237 | 237 | 100 |
| 2 | திருப்போரூர் | 323 | 323 | 100 |
| 3 | திருக்கழுக்குன்றம் | 211 | 211 | 100 |
| 4 | காட்டாங்கொளத்தூர் | 134 | 134 | 80 |
| 5 | இலத்தூர் | 196 | 196 | 80 |
| 6 | சித்தாமூர் | 187 | 187 | 80 |
| 7 | மதுராந்தகம் | 229 | 229 | 100 |
| 8 | காஞ்சிபுரம் | 323 | 323 | 120 |
| 9 | வாலாஜாபாத் | 245 | 245 | 120 |
| 10 | உத்திரமேரூர் | 435 | 435 | 120 |
| | மொத்தம் | 2520 நபர்கள் | 2520 நபர்கள் | 1000 நபர்கள் |

### காரிதாஸ் இந்தியாவின் ஆக்ஸிஜன் செறிவூட்டி (Oxygen Concentrator)

காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின் மூலம் ஆக்ஸிஜன் செறிவூட்டி (Oxygen Concentrator) ஒன்று செங்கல்பட்டு மறைமாவட்ட சமூகப்பணி மையத்திற்கு வழங்கப்பட்டது. கொரானா பெருந்தொற்று காலங்களில் மருத்துவமனையில் அல்லது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட நோயாளிகளுக்கு ஆக்ஸிஜன் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்ள இப்பொருள் வழங்கப்பட்டது. செங்கை மறைமாவட்டத்தின் செயலக செயலர் **அருட்பணி. ஜே. அந்தோணி** அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு மக்கள் நலனுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்விற்கு **திரு. ஜான் ஆரோக்கியராஜ்** அவர்கள் தலைமைத் தாங்கினார்.

### பன்னாட்டு காரிதாஸ் நிறுவனங்களின் மருத்துவ உபகரணங்கள்

காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின் உதவியுடன் காரிதாஸ் ஹாங்காங் மற்றும் காரிதாஸ் ஜப்பான் இணைந்து சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத் திட்டத்தின் கீழ் உள்ள பயனாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்துள்ள குடும்பங்கள் கொரானா பேரிடர் காலங்களில் பாதுகாப்பாக இருக்க 570 மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டது. ஒவ்வொரு மருத்துவக் கருவி பெட்டகத்திலும் முககவசம், சானிடைசர், பல்ஸ் ஆக்ஸிமீட்டர், தெர்மாமீட்டர், சுவாச பாதையை சீர்செய்யும் நீராவி மீட்டர் ஆகியவை அடங்கியுள்ளது. ஒவ்வொரு பயனாளிகளும் இக்கருவி இக்கட்டான இச்சூழ்நிலையில் தேவையெனவும், அவசியத்தை அறிந்து உதவிய காரிதாஸ் இந்தியா நிறுவனத்திற்கு தங்களது நன்றிகளை தெரிவித்தனர்.

### மருத்துவ உபகரணங்கள் பெற்றுக் கொண்ட குழுக்களின் விவரம் பின்வருமாறு :

| வ.எண் | ஒன்றியம் | கிராமம் | குழுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 12 | 55 |
| 2 | வாலாஜாபாத் | 11 | 72 |
| 3 | திருப்போரூர் | 14 | 72 |
| 4 | திருக்கழுக்குன்றம் | 14 | 65 |
| 5 | உத்திரமேரூர் | 13 | 55 |
| 6 | இலத்தூர் | 8 | 55 |
| 7 | சித்தாமூர் | 6 | 30 |
| 8 | மதுராந்தகம் | 5 | 30 |
| 9 | காட்டாங்கொளத்தூர் | 5 | 45 |
| 10 | அச்சிறுப்பாக்கம் | 19 | 55 |
| 11 | குழந்தைகள் பாராளுமன்றம் | 14 | 26 |
| | மொத்தம் | 126 | 570 |

Feeding India - Zomato - குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்கியது:

காரிதாஸ் நிறுவனத்தின் உதவியுடன் Feeding India - Zomato நிறுவனத்தின் மூலம் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள ஏழை மற்றும் நலிவடைந்த குழந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் நோக்குடன் கோதுமை மாவு, பருப்பு வகைகள் மற்றும் உப்பு ஆகிய பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகள் 1528 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் சமைத்த உணவுகள் சென்னை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் தோறும் சென்று ஏழை எளிய 4800 மக்களுக்கு 5 நாட்களாக வழங்கப்பட்டது.

| வ.எண் | ஒன்றியம் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 162 |
| 2 | வாலாஜாபாத் | 172 |
| 3 | திருப்போரூர் | 368 |
| 4 | திருக்கழுக்குன்றம் | 172 |
| 5 | உத்திரமேரூர் | 90 |
| 6 | இலத்தூர் | 125 |
| 7 | சித்தாமூர் | 80 |
| 8 | மதுராந்தகம் | 125 |
| 9 | காட்டாங்கொளத்தூர் | 95 |
| 10 | அச்சிறுப்பாக்கம் | 139 |
| | மொத்தம் | 1528 |

காரிதாஸ் இந்தியாவின் வெள்ள நிவாரணப்பணிகள்:

2021 நவம்பர் மாதத்தில் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட மழை பெரும் வெள்ளத்தில் கிராமங்களில் உள்ள ஓலை குடிசைகளில் வாழுகின்ற ஏழை மக்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி அவதிப்பட்டனர். இச்சூழலில் உணவு, தண்ணீர் மற்றும் மருத்துவ உதவி போன்ற தேவைகள் அதிகமாக ஏற்பட்டது. இச்சூழலில் இருந்து மக்களை காப்பாற்ற சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் உணவு தயார் செய்து பாதிப்பு அதிகமாக இருந்த பகுதிகளில் பகிர்ந்து அளிக்கப்பட்டது. அதன்பிறகு காரிதாஸ் இந்தியாவின் உதவியுடன் தார்பாய்கள் மற்றும் போர்வைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்கு செங்கை மறைமாவட்ட செயலக செயலர் தந்தை மற்றும் மறைமாவட்ட நீதித்துறை பொறுப்பாளர் தந்தை ஆகியோர் தலைமை தாங்கி வெள்ளத்தால் பாதிப்புள்ளாகிய மக்களுக்கு தார்பாய்கள் மற்றும் போர்வைகளை வழங்கினார்கள். நிறுவன இயக்குநர் அருட்பணி.இ.அந்தோணிராஜ் அவர்கள் இந்நிகழ்வை சிறப்பாக வழிநடத்தினார்.

## 2. கோல்பிங் இந்தியா (Kolping India)

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் அங்கமாக அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் செயல்பாட்டு நிறுவனமான கோல்பிங் இயக்கம் செயல்பட்டு வருகின்றது. கடந்த 18 ஆண்டுகளில் நமது மறைமாவட்டத்திலுள்ள 38 பங்குகளில் 70 கோல்பிங் குழுக்கள் (சிறுபான்மையினர் இஸ்லாமியர் சகோதர சகோதரிகளையும் உள்ளடக்கிய) குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் 1026 நபர்கள் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் வழியாக கடந்த 18 ஆண்டுகளில் கோல்பிங் உறுப்பினர்களின் தனிநபர் வருவாயை பெருக்குவதற்கு இவ்வாண்டு 1357 நபர்கள் சுழற்சி முறையில் கடன்பெற்று பயன்பெற்றுள்ளனர். அவர்களுக்கு கோல்பிங் இந்தியா நிறுவனத்தின் வழியாக அளிக்கப்பட்டுள்ள கடன்தொகை மொத்தம் ரூ.86,83,850 ஆகும்.

**திட்டத்தின் குறிக்கோள்:**

கோல்பிங் உறுப்பினர்கள் பொறுப்புள்ள மனிதர்களாகவும், பொறுப்புள்ள குடும்ப உறுப்பினர்களாகவும் தகுதி வாய்ந்த சுதந்திரமான உழைப்பாளர்களாகவும், பொறுப்புள்ள சமூக உறுப்பினர்களாகவும் விளங்கிட வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாக உள்ளது.

**நோக்கம்:**

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரையும் ஆன்மீகத்தில் இணைந்த பொருளாதார முன்னேற்றத்தில் தன்னிறைவை நோக்கி பயணிக்கச் செய்தல்.

**சமூக செயல்பாடுகள்:**

கோல்பிங் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் நற்செய்தி மதிப்பீடுகளை தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுவதற்கு பங்குதளங்கள் மற்றும் கிளைபங்குகளில் உள்ள பல்வேறு பொதுசேவை பணிகளில் ஈடுபட்டு பணிசெய்து வருவது போற்றுதற்குரியதாக அமைந்திருக்கிறது.

தங்கள் கிராமத்தின் வளர்ச்சியை கருத்தில்கொண்டு கிராமத்தில் உள்ள ஏழை, எளிய மக்களின் ஆன்மீக மற்றும் பொருளாதார தேவைகளை அறிந்து உதவும் பணிகளை கோல்பிங் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன.

நலிந்தோருக்கு உதவுதல், முதியோர் இல்லம் சந்திப்பு, ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், ஆதரவற்று இறக்கும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களை நல்லடக்கம் செய்தல், நோய்வாய்ப்பட்டோருக்காக ஜெபித்தல், ஆலய வளாகம் மற்றும் பொது இடங்களை துப்புரவு செய்தல் போன்ற பணிகளை சிறப்பாக கோல்பிங் இயக்கங்கள் செயல்படுத்திக்கொண்டு வருகின்றன.

**பொருளாதார செயல்பாடுகள்:**

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரும் தங்களிடையே சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கி ஒருமித்த கருத்துடன் செயல்பட்டு கல்வி, சமூக பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்ற செயல்பாடுகளில் தனிநபர் ஒருவர் குறைந்தபட்சம் ரூ.100 முதல் ரூ.1000 வரை சேமிக்கின்றனர். வங்கிகளில் கூட்டுக்கணக்கு துவங்கி நிதி-யினை பராமரிக்கவும், குழு உறுப்பினர்களின் தேவைக்கு உள்கடன் வழங்கி தங்கள் தேவைகளை பூர்த்தி செய்தும் வருகின்றனர்.

**கோல்பிங் இறப்பு நிதி:**

கோல்பிங் இயக்க உறுப்பினர்கள் இயற்கை மற்றும் விபத்து காரணமாக இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு கோல்பிங் இறப்பு நிதி வழியாக ரூ.5000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு மூன்று நபர்களுக்கு ரூ.15.000 இறப்புத்தொகை பெற்றுத்தரப்பட்டுள்ளது.

| வ.எண் | கிராமம் | இறந்தவரின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | பழவந்தாங்கல் | M.A ஆசன் | 5000 |
| 2 | விப்பேடு | J.சங்கீதா | 5000 |
| 3 | கடப்பாக்கம் | T.லூர்துமேரி | 5000 |
| | | மொத்தம் | 15000 |

**கோல்பிங் திட்டத்தின் வழியாக நிறைவேற்றப்படும் திட்டங்கள்:**

- வருவாய் பெருக்குத்திட்டம் (Income Generation Programme)
- கூட்டு வருவாய் பெருக்குத்திட்டம் (Collective Income Generation Programme)
- கறவைமாடு வளர்ப்புத்திட்டம் (Milch Animal Programme)
- வீடுகட்டும் திட்டம் (Housing Support Programme)
- தொழிற்பயிற்சி திட்டம் (Vocational Taining Programme)
- தனிநபர் கழிவறைத் திட்டம் (Individual Toilet Programme)

**குழு சுழல்நிதி தொழிற்கடன் பெற்றவர்கள்:**

| வ. எண் | பங்கு | கிராமம் | குழுவின் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | பல்லாவரம் | பல்லாவரம் | புனித அன்னை தெரசா கோல்பிங்குழு | 1,00,000.00 |
| 2 | வேடந்தாங்கல் | வினாயகநல்லூர் | விண்ணரசி மாதா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 3 | ஒரகடம் | கழனிப்பாக்கம் | அப்துல்கலாம் கோல்பிங்குழு | 1,00,000.00 |
| 4 | செங்காட்டூர் | செங்காட்டூர் | கோல்பிங் இந்தியா குழு | 1,00,000.00 |
| 5 | ராஜாஜி நகர் | ராஜாஜி நகர் | அறிஞர் அண்ணா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 6 | மாமல்லபுரம் | மாமல்லபுரம் | திருகுடும்பம் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 7 | திம்மசமுத்திரம் | கன்னடியன்குட்டை | சவேரியார் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| | | மொத்தம் | | 7,00,000.00 |

## கோல்பிங் சுற்றுச்சூழல் மேலாண்மைத்திட்டம்

கோல்பிங் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் மறைமாவட்டத்தில் உள்ள 6 கிராமங்களில் செயல்படுத்த முடிவு செய்து, கிராமங்களில் சுற்றுச்சூழலை மேம்படுத்த பஞ்சாயத்து மற்றும் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைந்து களப்பணி செய்த பகுதிகள் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | ஒன்றியம் | ஊராட்சி | கிராமம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | திருப்போரூர் | ஆலத்தூர் | ஆலத்தூர் |
| 2 | செங்கல்பட்டு | திருப்போரூர் | ஒரகடம் | ஒரகடம் |
| 3 | செங்கல்பட்டு | திருப்போரூர் | பையனூர் | அந்தோணியார் நகர் |
| 4 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | கம்மாளம்பூண்டி | கம்மாளம்பூண்டி |
| 5 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | பெருநங்கோழி | பெருநங்கோழி |
| 6 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | ஏனாத்தூர் | ஏனாத்தூர் |

### மறைமாவட்ட அளவில் திட்ட கிராமங்களில் வழங்கப்பட்ட பயிற்சிகள்:

- ❖ சுற்றுபுறச்சூழல் குறித்த விழிப்புணர்வு பயிற்சிகள்
- ❖ திறன் மேலாண்மை பயிற்சி
- ❖ தொழில்முனைவோர் ஊக்குவிப்பு பயிற்சி
- ❖ தலைமைத்துவ பயிற்சி
- ❖ சுற்றுசூழல் மேலாண்மை பயிற்சி
- ❖ சுகாதார விழிப்புணர்வு பயிற்சி
- ❖ வாழ்க்கைத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி
- ❖ கோல்பிங் கூட்டமைப்பு பயிற்சி
- ❖ ஆலோசனை மற்றும் வழக்காடுதல் பயிற்சி

### கோல்பிங் உறுப்பினர்களின் வளர்ச்சிகள்:

- ❖ சிறந்த குடிமக்களாக சமூகத்தில் வாழ ஊக்கம்பெற்று வருகின்றனர்.
- ❖ கோல்பிங் இயக்கத்தின் வழியாக குழுக்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.
- ❖ தொடர் சேமிப்பு செய்கின்றனர்.
- ❖ சமூக ஈடுபாடுகளில் அக்கறை கொள்ளுதல்
- ❖ ஆன்மீக வளர்ச்சிகளில் ஈடுபாடு
- ❖ திட்ட பயிற்சிகளில் பங்கேற்பதால் தனிநபர், குடும்பம், குழுக்கள் கிராமங்களில் உள்ள சுற்றுச் சூழலை அறிந்துக்கொள்கின்றனர்.

**2021 - 2022 கோல்பிங் இந்தியா கறவைமாடு திட்டத்தின் வழியாக கடன்பெற்றவர்கள் விவரம்:**

| வ.எண் | பங்கு | கிராமம் | குழுவின் பெயர் | பயனாளி பெயர் | கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | அம்மையப்ப நல்லூர் | சகாயபுரம் | வனத்து சின்னப்பர் கோல்பிங் குழு | C.அன்னமேரி | 10.000 |
| 2 | அம்மையப்ப நல்லூர் | சகாயபுரம் | வனத்து சின்னப்பர் கோல்பிங் குழு | ராக்கினி | 10.000 |
| 3 | கூத்தவாக்கம் | ஆலத்தூர் | குயின் கோல்பிங் குழு | R.குமாரி | 10.000 |
| 4 | கூத்தவாக்கம் | ஆலத்தூர் | ஆலயமணி கோல்பிங் குழு | C.ஞானமணி | 10.000 |
| 5 | ஒரகடம் | ஒரகடம் இருளர் பகுதி | மாரியம்மன் கோல்பிங் குழு | R.சித்ரா | 10.000 |
| 6 | ஒரகடம் | ஒரகடம் இருளர் பகுதி | மாரியம்மன் கோல்பிங் குழு | S. அமுதா | 10.000 |
| 7 | ஒரகடம் | ஒரகடம் இருளர் பகுதி | மாரியம்மன் கோல்பிங் குழு | R.மாரியம்மாள் | 10.000 |
| 8 | ஒரகடம் | ஒரகடம் இருளர் பகுதி | மாரியம்மன் கோல்பிங் குழு | K.ராமு | 10.000 |
| 9 | ஒரகடம் | ஒரகடம் இருளர் பகுதி | கன்னியம்மன் கோல்பிங் குழு | J.கவிதா | 10.000 |
| 10 | ஒரகடம் | ஒரகடம் இருளர் பகுதி | கன்னியம்மன் கோல்பிங் குழு | J.பச்சையம்மாள் | 10.000 |
| 11 | விப்பேடு | விப்பேடு | மாதா கோல்பிங் குழு | E.சகுந்தலா | 15.000 |
| 12 | மாமல்லபுரம் | சாலைவான்குப்பம் | செம்பருத்தி கோல்பிங் குழு | L.காளியம்மாள் | 15.000 |
| 13 | மாமல்லபுரம் | சாலைவான்குப்பம் | செம்பருத்தி கோல்பிங் குழு | K.கோகிலா | 15.000 |
| 14 | புலியூர் | புலியூர் | அருளானந்தர் கோல்பிங் குழு | A.ஜெயப்பன் | 15.000 |
| 15 | கரும்பாக்கம் | கரும்பாக்கம் | அன்னை தெரசா கோல்பிங் குழு | விஜயா பிரேமகுமாரி | 15.000 |
| 16 | கரும்பாக்கம் | கரும்பாக்கம் | தாமரை கோல்பிங் குழு | J.ஜான்ஸ்பின் | 15.000 |
| 17 | அச்சரப்பாக்கம் | நேமம் | அன்னை பாத்திமா கோல்பிங் குழு | M.ரோஜாதன் | 15.000 |
| 18 | அச்சரப்பாக்கம் | நேமம் | அன்னை தெவைத் கோல்பிங் குழு | B.மெஹருனிசா | 15.000 |
| 19 | ஒரகடம் | கழனிப்பாக்கம் | அன்னை தெரசா கோல்பிங் குழு | M.ராணி | 15.000 |
| 20 | ஒரகடம் | கழனிப்பாக்கம் | அப்துல்கலாம் கோல்பிங் குழு | K.ராணி | 15.000 |
| | | | | மொத்தம் | 2,50,000 |

### தொழிற்பயிற்சி கல்வித்திட்டத்தின் வழியாக கடன்பெற்றவர்கள் விவரம்:

| வ.எண் | பாங்கு | கிராமம் | குழுவின் பெயர் | பயனாளி பெயர் | கடன்தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | அம்மையப்பநல்லூர் | சகாயபுரம் | வனத்துசின்னப்பர் கோல்பிங் குழு | வனஜா | 10.000 |
| 2 | அச்சரப்பாக்கம் | நேமம் | அன்னை பாத்திமா கோல்பிங் குழு | K. ரெஜினாபேகம் | 10,000 |
| 3 | கூத்தவாக்கம் | ஆலத்தூர் | குயின் கோல்பிங்குழு | J.சுலோச்சனா | 10.000 |
| 4 | கூத்தவாக்கம் | ஆலத்தூர் | ஆலயமணி கோல்பிங் குழு | S.அனிதா | 10.000 |
| 5 | கூத்தவாக்கம் | புலியூர் | அருளானந்தர் கோல்பிங் குழு | F.சௌரிநாதன் | 10.000 |
| 6 | கூத்தவாக்கம் | புலியூர் | அருளானந்தர் கோல்பிங் குழு | C.சார்லஸ் | 10,000 |
| 7 | ஒரகடம் | ஒரகடம் | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு | A.ஜெயமாலை | 15.000 |
| 8 | ஒரகடம் | ஒரகடம் | மாரியம்மன் கோல்பிங் குழு | K.அஞ்சாலை | 10.000 |
| 9 | ஒரகடம் | ஒரகடம் | சகாயமாதா கோல்பிங் குழு | S.அம்மு | 15.000 |
| 10 | அச்சரப்பாக்கம் | நேமம் | அன்னை பாத்திமா கோல்பிங் குழு | செல்வி | 15.000 |
| 11 | மாமல்லபுரம் | சாலவான்குப்பம் | செம்பருத்தி கோல்பிங் குழு | V.அஞ்சாலை | 15,000 |
| 12 | செங்கல்பட்டு | திம்மாவரம் | அமுதசுரபி கோல்பிங் குழு | T.ஜான்சன் | 15,000 |
| 13 | பெருங்கோழி | பெருங்கோழி | புனித சூசையப்பர் கோல்பிங் குழு | செலின்மேரி | 15.000 |
| மொத்தம் | | | | | 1,60,000 |

## தனிநபர் கழிவறைத் திட்டத்தின் வழியாக கடன்பெற்றவர்கள் விவரம்:

| வ.எண் | பங்கு | கிராமம் | குழுவின் பெயர் | பயனாளி பெயர் | கடன்தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | ஒரகடம் | ஒரகடம் | லூர்துமாமாதா கோல்பிங் குழு | K.கஸ்தூரி | 15.000 |
| 2 | ஒரகடம் | ஒரகடம் | லூர்துமாதா கோல்பிங் குழு | ஆரோக்கியமேரி | 15.000 |
| 3 | ஒரகடம் | ஒரகடம் | சகாயமாதா கோல்பிங் குழு | D.அந்தோணிமேரி | 15.000 |
| 4 | ஒரகடம் | ஒரகடம் | சகாயமாதா கோல்பிங் குழு | S.பாரதி | 15.000 |
| 5 | கரும்பாக்கம் | கரும்பாக்கம் | சூரியகாந்தி கோல்பிங் குழு | K.ரூபினி | 15.000 |
| 6 | கரும்பாக்கம் | கரும்பாக்கம் | ரோஜா கோல்பிங் குழு | மேக்லின் | 15.000 |
| 7 | கரும்பாக்கம் | கரும்பாக்கம் | அன்னை தெரசா கோல்பிங் குழு | V.விஜி | 15.000 |
| 8 | கரும்பாக்கம் | கரும்பாக்கம் | அன்னை தெரசா கோல்பிங் குழு | செல்லியம்மா | 15.000 |
| 9 | ஒரகடம் | கழனிப்பாக்கம் | டாக்டர் அம்பேத்கார் கோல்பிங் குழு | ஜோதி | 15.000 |
| 10 | ஒரகடம் | கழனிப்பாக்கம் | அப்துல்கலாம் கோல்பிங் குழு | A.சாந்தி | 15.000 |
| 11 | அச்சரப்பாக்கம் | நேமம் | அன்னை பாத்திமா கோல்பிங் குழு | H.மாலின் | 15.000 |
| 12 | ஒரகடம் | கழனிப்பாக்கம் | டாக்டர் அம்பேத்கார் கோல்பிங் குழு | V.இளஞ்சியம் | 15.000 |
| 13 | ஒரகடம் | கழனிப்பாக்கம் | அன்னை தெரசா கோல்பிங் குழு | D.ரேகா | 15.000 |
| 14 | மாமல்லபுரம் | சாலவான்குப்பம் | செம்பருத்தி கோல்பிங் குழு | J.மேரி | 15.000 |
| 15 | மாமல்லபுரம் | சாலவான்குப்பம் | காமராஜர் கோல்பிங் குழு | H.வனிதா | 15.000 |
| 16 | மாமல்லபுரம் | சாலவான்குப்பம் | காமராஜர் கோல்பிங் குழு | V.மகாலட்சுமி | 15.000 |
| 17 | கரும்பாக்கம் | கரும்பாக்கம் | தாமரை கோல்பிங் குழு | D.சரோஜா | 15.000 |
| 18 | கரும்பாக்கம் | கரும்பாக்கம் | ரோஜா கோல்பிங் குழு | தனலட்சுமி | 15.000 |
| 19 | ஒரகடம் | கழனிப்பாக்கம் | அப்துல்கலாம் கோல்பிங் குழு | S.கலையரசி | 15.000 |
| 20 | செங்கல்பட்டு | திம்மாவரம் | அமுதசுரபி கோல்பிங் குழு | ராஜகுமாரி | 15.000 |
| மொத்தம் | | | | | 3.00.000 |

## 3. புதிய கண்ணோட்டம் (New Thrust)

புதிய கண்ணோட்டத் திட்ட பணியானது தமிழக சமூகப் பணி மையம் (TASOSS – TRICHY) நிறுவன வழிகாட்டுதலுடன் கடந்த 21 ஆண்டுகளாக 6 கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 6வது கட்டத்தின் தொடர்செயல்பாடாக 2018 ஆம் ஆண்டு முதல் 2021 மார்ச் வரை இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேற்கண்ட திட்ட பணிகள் மூலம் இலக்கு மக்கள் உரிமை சார்ந்த பிரச்சினைகள், வாழ்வாதாரம், குழந்தைகள் பாராளுமன்றம் துவங்குதல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட அளவில் கடந்த 22 ஆண்டுகளாக பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் தொடர் செயல்பாடாக புதிய கண்ணோட்ட திட்ட 7-வது கட்ட பணியானது 2021 ஜீன் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான கீழ்கண்ட திட்ட செயல்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### புதிய கண்ணோட்ட திட்டம் - 7 ஆம் கட்டம் (நமது கிராமம் - நமது முன்னேற்றம்)

நோக்கம்:

- நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்கின் அடிப்படையில் முழு கிராம வளர்ச்சி நிலையை உருவாக்குதல்

- காலம்:

  2021 ஜீன் முதல் 2022 மே வரை

**கிராம வளர்ச்சி:**

- கிராமப் புறங்களில் வாழும் மக்கள் சமூக, பொருளாதார, நிலைகளில் மேம்பாடு அடைதல்
- வறுமை, கல்வி, நலவாழ்வு, வேலைவாய்ப்பு, சமத்துவம் ஆகியவற்றில் மேம்பாடு அடைதல்
- அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், வீட்டு வசதி, குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் மேம்பாடு அடைதல்
- அனைவருக்கும் சமமானதாவும், மனித திறமைகளை உயர்த்துவதாக இருக்கும் மாற்றுநிலை

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தளமாகிய காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், கருவேப்பம்பூண்டி கிராம ஊராட்சி புதிய கண்ணோட்ட திட்ட பணிக்கான இலக்கு கிராமமாக நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் பணியாளர்களால் தேர்வு செய்யப்பட்டு முறையாக திருச்சி டாசோஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன் செயல்பாடுகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கருவேப்பம்பூண்டி கிராம ஊராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் :**

- கருவேப்பம்பூண்டி - ஆதிதிராவிடர் பகுதி
- கருவேப்பம்பூண்டி - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பகுதி
- கருவேப்பம்பூண்டி - மடம்

மேற்குறிப்பிட்ட பகுதிகளை இணைத்து இக்கிராமத்தில் உள்ள 13 மகளிர் குழு உறுப்பினர்கள், ஊராட்சி அமைப்பின் தலைவர், வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி செயலர் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர்களை இணைத்து திட்ட பணிக்கான கீழ்க்கண்ட கிராம அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- கிராம சபை
- கிராம ஊராட்சி
- நிலை குழுக்கள் (வளர்ச்சிக் குழு, வேளாண்மை மற்றும் நீர்பிடிமுகடுக் குழு, பணிக்குழு, கல்விக்குழு)
- ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள்
- கிராம வறுமை ஒழிப்பு சங்கம் (BPL)
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ( PLF)
- கிராம ஊராட்சி செயலர் (GPS)
- பிற அரசு துறைகள்
- சமுதாயம் சார்ந்த அமைப்புகள

மேற்கண்ட அமைப்புகள் இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டு கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டக்குழு (GPDP) உருவாக்கப்பட்டுள்ளது.
புதிய கண்ணோட்ட திட்டத்தின் 7 ஆம் கட்டகத்தின் தொடர் செயல்பாடாக திட்டம் சார்ந்த பயிற்சிகள் கிராம மக்களுக்கு வழங்கப்பட்டு திட்டத்தின் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறாக பணியாளர்கள் மற்றும் திட்ட கிராம மக்களுக்கு கீழ்கண்ட திட்ட பயிற்சிகள் கடந்த ஓராண்டில் வழங்கப்பட்டுள்ளது.

- 2021 ஜீலை மாதம் - திட்ட பணியாளர்களுக்கான திட்ட அறிமுக பயிற்சி அளிக்கப்பட்டது
- 2021 ஆகஸ்ட் மாதம் - திட்ட ஊராட்சியின் மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்களக்கான ஒருங்கமைவு கூட்டம் நடத்தப்பட்டு திட்டத்தின் நோக்கம், செயல்பாடுகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது
- 2021 செப்டம்பர் மாதம் - திட்ட ஊராட்சியின் கிராமங்கள், வளங்கள், தேவைகள், தேவைப்படும் திட்ட செயல்பாடுகள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டு மக்கள் பங்கேற்புடன் கூடிய கிராம வள ஆய்வு செய்யப்பட்டது.
- 2021 அக்டோபர் மாதம் உள்ளாட்சி மன்ற தேர்தல் குறித்த விழிப்புணர்வு பயிற்சி கூட்டங்கள் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் கவுன்சிலர், ஊராட்சி மன்ற தலைவர், வார்டு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் உள்ளாட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுதல் குறித்தும் ஊராட்சி அமைப்பின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கப்பட்டது.
- அக்டோபர் மாதம் - திட்ட கிராம பகுதியின் உள்ளாட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களுக்கான வரவேற்பு மற்றும் திட்ட செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கான திட்டமிடல் கூட்டம் நடத்தப்பட்டது.
- 2021 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் சிறுதொழில் செய்வோருக்கான தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டது.
- 2022 ஜனவரி மாதம் - குழந்தைகள் பாராளுமன்றம் அமைத்தல் தொடர்பான மக்கள் அமைப்புகளுடன் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது.
- 2022 பிப்ரவரி மாதம் - சிறுதொழில் முனைவோர் பயிற்சி, குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கான தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் விற்பனை, சந்தைபடுத்துதல் குறித்து டாசோஸ் திட்ட அலுவலர் திருமதி. கீதா அவர்கள் கலந்துக்கொண்டு பயிற்சியின் கருத்துக்களை மக்களுக்கு விளக்கினார்கள்.

### குழந்தைகள் பாராளுமன்றம்:

கிராம பணித்தளங்களில் உள்ள குழந்தைகளை ஒருங்கிணைத்து குழந்தைகள் பாராளுமன்றம் அமைத்து குழந்தைகளுக்கு நாட்டின் அமைப்பு முறை, அரசியல் முறை, உள்ளாட்சி மற்றும் ஊராட்சி அமைப்புகள், நாட்டின் நலன், சேமிப்பு முறை, தலைமைத்துவ பண்பு போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. குழந்தைகள் பாராளுமன்றத்தின் வழியாக கல்வியில் அதிக கவனம் செலுத்துகின்றனர். பொதுவான கிராம செயல்பாடுகளில் கவனம் செலுத்துகின்றனர். திறமைகளை வளர்க்க ஆரோக்கியமான போட்டிகள் நடைபெறுகிறது. பொது அறிவுத்திறன் வளர்க்கப்படுகிறது. நல்லொழுக்கங்களை கற்றுக் கொள்கின்றனர்.

### கிராமங்களில் இவர்களின் பணிகள்:

- வாரத்திற்கு ஒருமுறை தெரு சுத்தம் செய்தல்
- பள்ளிக்குச் செல்லாத பிள்ளைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்லுதல்
- இரவுபள்ளிக்கு ஆர்வம் காட்டுதல்
- வீட்டுத்தோட்டம் அமைத்தல்
- கிராம சபா கூட்டங்களில் கலந்துக் கொள்ளுதல்
- கிராமங்களில் மரக்கன்றுகள் நடுதல்

### சுதிர் திட்டம் - ஆர்.சி.சி.இ - கொரானா விழிப்புணர்வு திட்டம்

- 22.10.2021 அன்று மாநில அளவிலான மாதாந்திர ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் இணையம் வழியாக நடைபெற்றது. அக்கூட்டத்தில் செங்கல்பட்டு மறைமாவட்டத்தில் நடைபெற்ற சிறப்பு செயல்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் திரு. பாரத் அவர்கள் பகிர்ந்து கொண்டார்.
- 25.10.2021 அன்று டாசோஸ் இயக்குநர், அருட்பணி. ஆல்பர்ட் தம்பிதுரை, உதவி இயக்குநர், அருட்பணி. ஆரோக்கியசாமி, திட்ட மேலாளர் திரு. ஆனந்த அவர்கள் இத்திட்ட செயல்பாடுகளை அறிய சி.ஆர்.டி.எஸ்க்கு வந்திருந்தனர். சி.ஆர்.டி.எஸ் இயக்குனர் வருகைப்புரிந்த அனைவருக்கும் பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. பாரத் அவர்கள் விருந்தினர்களை வரவேற்று திட்ட செயல்பாடுகளையும் சிறப்பு செயல்பாடுகளையும் அறிக்கையாக சமர்பித்தார். டாசோஸ் இயக்குநர் அவர்கள் கொரானா செயல்பாடுகளை பார்வையிட்டு வாழ்த்து தெரிவித்து எங்களை ஊக்குவித்து சென்றார்.
- 26.10.21 அன்று திரு. சுதாகர், டாசோஸ் கணக்காளர் அவர்கள் சுதிர் திட்ட தன்னார்வலர்களுக்கு மருத்துவ உபகரண கருவி அடங்கிய பைகளை நிறுவனத்திற்கு கொடுத்துவிட்டு சென்றார்.
- 27.10.21 அன்று சி.ஆர்.டி.எஸ் இயக்குனர் அவர்கள் மருத்துவ உபகரண கருவிகள் அடங்கிய பைகளை தன்னார்வலர்களுக்கு வழங்கினார்.

## 4. இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தின் குழு காப்பீட்டுத் திட்டம் (LIC – Group Insurance)

LIC –யின் ஜனஸ்ரீ பீமா யோஜனா - செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் கடந்த 2005–ஆம் ஆண்டு முதல் எல்.ஐ.சி உடன் இணைந்து LIC-யின் ஜனஸ்ரீ பீமா யோஜனா என்ற திட்டத்தை 16 ஆண்டுகாலமாக நடைமுறைப்படுத்தி வந்தது. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு மேற்கண்ட திட்டத்தை மத்திய அரசு விலக்கி கொண்டதின் பேரில் அதற்கு மாற்றுத்திட்டமான குழு காப்பீட்டுத் திட்டத்தை சி.ஆர்.டி.எஸ் நடைமுறைப்படுத்தி வருகின்றது. தற்போது 2021 - 2022 ஆம் ஆண்டில் கோரோனா பெருந்தொற்று குறைந்து வருவதால் மீண்டும் இத்திட்டத்தை நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் உறுப்பினராக சேருவதற்கு 18 வயது முதல் 59 வயது வரை உள்ளவர்கள் இத்திட்டத்தில் இணைந்து பயன்பெறலாம். இத்திட்டத்தில் இணைந்துள்ள உறுப்பினர்களுக்கு இயற்கை மரணம் ஏற்பட்டாலோ அல்லது விபத்து காரணமாக இறக்க நேரிட்டாலோ மரணம் அடைபவர்களுக்கு ரூ.15,000 அவர்களுடைய வாரிசுதாரர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 2021 - 2022 ஆம் ஆண்டில் ஒன்றியம் வாரியாக இணைந்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | திருக்கழுக்குன்றம் | 547 |
| 2 | திருப்போரூர் | 812 |
| 3 | காட்டாங்கொளத்தூர் | 273 |
| 4 | அச்சரப்பாக்கம் | 429 |
| 5 | காஞ்சிபுரம் | 261 |
| 6 | வாலாஜாபாத் | 260 |
| 7 | லத்தூர் | 252 |
| 8 | சித்தாமூர் | 87 |
| 9 | கடற்கரை பகுதிகள் | 255 |
| 10 | கோல்பிங் இந்தியா | 47 |
| 11 | உத்திரமேரூர் | 511 |
| | மொத்தம் | 3734 |

2021-2022 ஆம் ஆண்டில் குழுக்காப்பீட்டு திட்டத்தின் மூலம் இயற்கை மற்றும் விபத்து காரணமாக மரணம் அடைந்து இறப்பு இழப்பீட்டு தொகை பெற்றவர்களின் பெயர்பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கீழ்கண்டவர்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களுடைய வங்கி கணக்கில் இறப்பு இழப்பீட்டுத்தொகை செலுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | இறந்தவர் பெயர் | விலாசம் | வாரிசுதாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | உடமா | கடும்பாடி, மாமல்லபுரம் | சுப்பிரமணி | 15,000.00 |
| 2 | பாரதி | வையாவூர், காஞ்சிபுரம் | மு.மஞ்சுளா | 15,000.00 |
| 3 | நாகம்மாள் | புலியூர், திருக்கழுக்குன்றம் | தம்பிரான் | 15,000.00 |
| 4 | உத்தரக்கோட்டி | குழிப்பாந்தண்டலம், திருக்கழுக்குன்றம் | வி.சீதா | 15,000.00 |
| 5 | சகாயம் | மாம்பாக்கம், உத்திரமேரூர் | ச.வச்சலா | 15,000.00 |
| 6 | கற்பகம் | கொக்கிலமேடு, மாமல்லபுரம் | ஆவியப்பன் | 15,000.00 |
| | | | மொத்தம் | 90,000.00 |

## 5. நாபின்ஸ் நுண்கடன் திட்டம்: (Nabfins)

நாபின்ஸ் நுண்கடன் திட்டமானது கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து நபார்டு வங்கியின் மூலம் நிதிஉதவி பெற்று செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள 10 ஒன்றியங்களிலும் உள்ள ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்கு கடனுதவி வழங்கி இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கடனுதவி தொகையானது பொருளாதார மேம்பாடு எனும் நோக்கத்திற்காக மகளிர் குழுக்கள் மற்றும் குழுக்கள் அல்லாத கூட்டு பொறுப்பு குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் விரும்பும் தொழில் செய்து வருமானம் பெருக்கும் நோக்கத்திற்காக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு கடந்த ஓராண்டில் நாபின்ஸ் நுண்கடன் திட்டத்தின் வழியாக ஒன்றியம் வாரியாக கடனுதவி பெற்ற குழுக்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| அச்சரப்பாக்கம் ஒன்றியம் | | | |
|---|---|---|---|
| வ.எண் | கிராமம் | குழுவின் பெயர் | பெறப்பட்ட தொகை |
| 1 | பாப்பநல்லூர் | டாக்டர்.அம்பேத்கார் மகளிர் குழு | 5,10,000.00 |
| 2 | பாப்பநல்லூர் | சிறுமலர் மகளிர் குழு | 5,35,000.00 |
| 3 | பாப்பநல்லூர் | அன்னை தெரசா மகளிர் குழு | 5,35,000.00 |
| 4 | காட்டுக்கரணை | செந்தூரம் ஜே.எல்.ஜி 1 | 2,40,000.00 |
| 5 | காட்டுக்கரணை | செந்தூரம் ஜே.எல்.ஜி 2 | 2,00,000.00 |
| 6 | காட்டுக்கரணை | செம்பருத்தி ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 7 | எலப்பாக்கம் | மல்லிகை ஜே.எல்.ஜி 3 | 2,00,000.00 |
| | | மொத்தம் | 23,80,000.00 |

| | | | |
|---|---|---|---|
| காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் | | | |
| 1 | மேல்மணப்பாக்கம் | சிகரம் மகளிர் குழு | 4,20,000.00 |
| 2 | மேல்மணப்பாக்கம் | விடியல் ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 3 | மேல்மணப்பாக்கம் | விடியல் ஜே.எல்.ஜி 2 | 2,00,000.00 |
| 4 | மேல்மணப்பாக்கம் | செவ்வந்தி ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 5 | மேல்மணப்பாக்கம் | அத்திப்பூக்கள் மகளிர் குழு | 2,40,000.00 |
| 6 | பாலூர் | தாழம்பூ ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 7 | பாலூர் | நெற்களஞ்சியம் ஜே.எல்.ஜி | 2,40,000.00 |
| 8 | மேல்மணப்பாக்கம் | ஓம் சாய்ராம் ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| | | **மொத்தம்** | **17,40,000.00** |
| **இலத்தூர்** | | | |
| 1 | சீவாடி | திருமதி மகளிர் குழு | 6,50,000.00 |
| 2 | சீவாடி | குறிஞ்சி மகளிர் குழு | 3,55,000.00 |
| 3 | சீவாடி | மலையரசி மகளிர் குழு | 3,05,000.00 |
| 4 | விழுதமங்கலம் | பூவாசம் மகளிர் குழு | 7,30,000.00 |
| 5 | விழுதமங்கலம் | பாரதியார் மகளிர் குழு | 4,55,000.00 |
| 6 | சீவாடி | மழைமலை மாதா மகளிர் குழு | 4,25,000.00 |
| 7 | சத்திரம்பேட்டை | செம்பருத்தி மகளிர் குழு | 4,50,000.00 |
| 8 | நெல்வாய் பாளையம் | விடியல் மகளிர் குழு | 2,70,000.00 |
| | | **மொத்தம்** | **36,40,000.00** |
| **மதுராந்தகம்** | | | |
| 1 | கீழ்பட்டு | விடிவெள்ளி | 7,50,000.00 |
| 2 | கீழ்பட்டு | தீபம் | 4,80,000.00 |
| 3 | கீழ்பட்டு | மல்லிகை மகளிர் குழு | 5,40,000.00 |
| 4 | பள்ளியகரம் | ஸ்ரீ ராமர் ஜே.எல்.ஜி | 2,00,000.00 |
| 5 | பள்ளியகரம் | பட்டாபிராம் ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 6 | தச்சூர் | தீபம் மகளிர் குழு | 7,45,000.00 |
| 7 | தச்சூர் | குறிஞ்சி மகளிர் குழு | 9,65,000.00 |
| 8 | புதூர் | முல்லை மகளிர் குழு | 1,60,000.00 |
| | | **மொத்தம்** | **40,00,000.00** |

| | | | |
|---|---|---|---|
| **சித்தாமூர் ஒன்றியம்** | | | |
| 1 | கடப்பாக்கம் | மலையரசி மகளிர் குழு | 4,30,000.00 |
| 2 | சித்தாமூர் | சாய்பாபா ஜே.எல்.ஜி | 1,20,000.00 |
| 3 | எரவாநல்லூர் | ரோஜா மகளிர் குழு | 8,70,000.00 |
| 4 | கடப்பாக்கம் | லில்லி ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 5 | கடப்பாக்கம் | செம்பருத்தி ஜே.எல்.ஜி | 1,20,000.00 |
| 6 | சித்தூர் | விநாயகர் ஜே.எல்.ஜி | 2,00,000.00 |
| 7 | தேன்பாக்கம் | மலரும் மொட்டுக்கள் மகளிர் குழு | 7,05,000.00 |
| | | **மொத்தம்** | **26,05,000.00** |
| **திருக்கழுக்குன்றம் ஒன்றியம்** | | | |
| 1 | புலியூர் | அப்துல்கலாம் ஜே.எல்.ஜி 1 | 2,40,000.00 |
| 2 | புலியூர் | அப்துல்கலாம் ஜே.எல்.ஜி 2 | 2,40,000.00 |
| 3 | உதயம்பாக்கம் | தீபம் மகளிர் குழு | 6,80,000.00 |
| 4 | உதயம்பாக்கம் | உதயம் மகளிர் குழு | 5,30,000.00 |
| 5 | மணப்பாக்கம் | முல்லை மகளிர் குழு | 5,40,000.00 |
| 6 | உதயம்பாக்கம் | நிலா மகளிர் குழு | 4,30,000.00 |
| 7 | உதயம்பாக்கம் | அன்னை ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 8 | உதயம்பாக்கம் | சாமந்தி மகளிர் குழு | 4,10,000.00 |
| 9 | உதயம்பாக்கம் | மல்லிகை மகளிர் குழு | 6,05,000.00 |
| 10 | உதயம்பாக்கம் | கன்னியம்மன் மகளிர் குழு | 6,85,000.00 |
| 11 | பூஞ்சேரி | பூஞ்சோலை மகளிர் குழு | 6,80,000.00 |
| 12 | கடம்பாடி | நிலா மகளிர் குழு | 3,00,000.00 |
| | | **மொத்தம்** | **63,00,000.00** |
| **திருப்போரூர் ஒன்றியம்** | | | |
| 1 | கேளம்பாக்கம் | ரோஜா மகளிர் குழு | 3,60,000.00 |
| 2 | வேலங்காடு | விடுதலை மகளிர் குழு | 7,20,000.00 |
| 3 | சிறுதாவூர் | உதயம் மகளிர் குழு | 6,30,000.00 |
| 4 | சிறுதாவூர் | பூஞ்சோலை மகளிர் குழு | 4,70,000.00 |
| 5 | காலவாக்கம் | பாரதி ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 6 | ஒரகடம் | சாமந்தி ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 7 | ஒரகடம் | மல்லிகை ஜே.எல்.ஜி | 2,40,000.00 |
| 8 | குப்பத்துக்குன்று | அம்மன் மகளிர் குழு | 9,05,000.00 |
| 9 | காரணை | செல்லியம்மன் மகளிர் குழு | 2,95,000.00 |
| 10 | பெரியவிப்பேடு | லில்லி மகளிர் குழு | 5,00,000.00 |
| 11 | பெரியவிப்பேடு | சூரியகாந்தி குழு | 9,65,000.00 |
| 12 | பெரியவிப்பேடு | ராமாபாய் குழு | 7,75,000.00 |
| 13 | சிறுதாவூர் | காலைகதிர் குழு | 6,90,000.00 |
| | | **மொத்தம்** | **68,70,000.00** |
| **உத்திரமேரூர் ஒன்றியம்** | | | |
| 1 | ஆர்.என்.கண்டிகை | செவ்வந்தி ஜே.எல்.ஜி 2 | 2,40,000.00 |
| 2 | ஆர்.என்.கண்டிகை | அமல அன்னை ஜே.எல்.ஜி 1 | 2,00,000.00 |
| 3 | ஆர்.என்.கண்டிகை | அமல் அன்னை ஜே.எல்.ஜி 2 | 1,60,000.00 |
| 4 | ஆர்.என்.கண்டிகை | இமயம் ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 5 | அம்மையப்பநல்லூர் | மகுடம் ஜே.எல்.ஜி | 5,10,000.00 |
| 6 | உத்திரமேரூர் | ஓம்சக்தி குழு | 9,55,000.00 |
| 7 | உத்திரமேரூர் | அங்காளம்மன் மகளிர் குழு | 3,75,000.00 |

| உத்திரமேரூர் ஒன்றியம் | | | |
|---|---|---|---|
| வ.எண் | கிராமம் | குழு பெயர் | பெறப்பட்ட தொகை |
| 8 | கம்மாளம்பூண்டி | முல்லை மகளிர் குழு | 5,20,000.00 |
| 9 | கம்மாளம்பூண்டி | தாமரை மகளிர் சங்கம் | 5,30,000.00 |
| 10 | உத்திரமேரூர் | விவேகானந்தா குழு | 2,00,000.00 |
| 11 | உத்திரமேரூர் | ஸ்ரீ சாய்ராம் ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 12 | உத்திரமேரூர் | ஸ்ரீ சாய்ராம் ஜே.எல்.ஜி 1 | 2,40,000.00 |
| 13 | ஆர்.என்.கண்டிகை | தாமரை ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 14 | உத்திரமேரூர் | செல்லியம்மன் ஜே.எல்.ஜி 1 | 1,60,000.00 |
| 15 | உத்திரமேரூர் | செல்லியம்மன் ஜே.எல்.ஜி 2 | 1,60,000.00 |
| 16 | சிறுங்கோழி | தாமரை ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 17 | சிறுங்கோழி | ரோஜா ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| | | மொத்தம் | 26,05,000.00 |
| வாலாஜாபாத் ஒன்றியம் | | | |
| 1 | வாரணவாசி | ரோஜா ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 2 | வாரணவாசி | சாமந்தி ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 3 | வாரணவாசி | தாமரை ஜே.எல்.ஜி | 2,00,000.00 |
| 4 | ஏரிவாக்கம் | முத்தமிழ் மகளிர் குழு | 3,60,000.00 |
| 5 | ஏனாத்தூர் | சி.ஆர்.டி.எஸ் விண்ணரசி மகளிர் குழு | 3,90,000.00 |
| 6 | வையாவூர் | பனிமலர் ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 7 | வாரணவாசி | மல்லிகை ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 8 | ஏனாத்தூர் | சி.ஆர்.டி.எஸ் தீபம் மகளிர் குழு | 3,45,000.00 |
| 9 | காரை | தங்கமங்கையர் ஜே.எல்.ஜி | 2,40,000.00 |
| | | மொத்தம் | 21,75,000.00 |
| 2021 - 2022 ஆம் ஆண்டின் மொத்த கடனுதவித் தொகை | | | 3,92,25,000.00 |

## 6. மாற்றுத்திறனாளகளுக்கான சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம் (Community Based Rehablitation)

மாற்றுத்திறனாளிகள் என்பவர்கள் உடலிலோ அல்லது மனதிலோ ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக அவர்களால் சாதாரண மனிதர்களைப் போன்று சில செயல்களை செய்ய முடியாத அவர்களின் இயலாத்தன்மையை குறிக்கிறது. மாற்றுத்திறனாளிகளை சமுதாயத்தில் ஓர் அங்கமாக அனைவரும் ஏற்கவும், சமுதாய வளர்ச்சியில் மாற்றுத்திறனாளிகளும் பங்கேற்பதற்கும் சம வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும் பெங்களூரை தலைமையிடமாக கொண்டுள்ள சி.பி.ஆர் நிறுவனத்தின் மூலம் இத்திட்டமானது கடந்த 3 ஆண்டுகளாக செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இரு மாவட்டங்களில் உள்ள திருப்போரூர் மற்றும் வாலாஜாபாத் ஆகிய இரண்டு ஒன்றியங்களிலும் 2 திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் 4 களப்பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 85 கிராமங்களில் உள்ள 21 வகையில் பாதிக்கப்பட்ட 936 மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**நோக்கம்:**

ஒரு தனிமனிதனுக்கு சமுதாயத்தில் கிடைக்கும் அனைத்து உரிமைகளும் மாற்றுத்திறனாளிகளுக்கும் கிடைத்திட வழிவகை செய்தல்

**கருப்பொருள்:**

- சுகாதாரம் (Health)
- கல்வி (Education)
- வேலைவாய்ப்பு (Livelihood)
- சமூகம் (Social)
- மேம்பாடு (Empowerment)

**சுகாதாரம் : (Health)**

மாற்றுத்திறனாளிகளுக்கான உடல்சார்ந்த பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்திடவும், சுகாதார பிரச்சினைகளை களைந்திடவும் அரசின் மருத்துவ திட்டங்களை மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தி அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுதல் போன்ற உயரிய நோக்கில் மாற்றுத்திறனாளிகளையும் சமுதாயத்தின் அங்கத்தினராக மாற்றும் பொருட்டு காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் (NIEPMED), மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மனநல மருத்துவமனை (THE BANYAN), அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடிகள் ஆகியவை பார்வையிடப்பட்டு மாற்றுத்திறனாளிகளின் மருத்துவத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ உதவி உபகரணங்கள் பெறுதல், மாற்றுத்திறனாளி குழந்தைகள் ஆரம்ப நிலையில் கண்டறியப்பட்டு அவர்களுக்கான மருத்துவ சிகிச்சை மற்றும் தொடர் கண்காணிப்பின் மூலம் அவர்களுக்கான உடல் உறுப்புகள் சார்ந்த குறைபாடுகள் சரிசெய்யப்படுகின்றன. இவ்வாறாக கடந்த ஓராண்டில் மாற்றுத்திறனாளிகளின் சுகாதாரம் மற்றும் நலன் சார்ந்த பணிகள் திட்ட கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவையாவன:

கடந்த ஓராண்டில் மாற்றுத்திறனாளிகளின் சுகாதாரம் மற்றும் நலன் சார்ந்த பணிகள் திட்ட கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவையாவன:

| வ.எண் | அரசு திட்டங்கள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சக்கர நாற்காலி | 25 |
| 2 | ஊன்றுக்கோல் | 14 |
| 3 | கல்வி சார்ந்த உபகரணம் | 5 |
| 4 | மோட்டார் வாகனம் | 2 |
| 5 | காதொலிக்கருவி | 10 |
| 6 | அலைப்பேசி | 2 |
| 7 | நடைவண்டி | 5 |
| 8 | செயற்கை கால், கை | 4 |
| 9 | மூன்று சக்கரவண்டி | 8 |
| 10 | மாற்றுத்திறனாளி அடையாள அட்டை | 132 |
| 11 | தேசிய அடையாள அட்டை (UDID Card) | 210 |
| 12 | மனவளர்ச்சி குறைபாடுடையவர்களுக்கு வாழ்க்கைதிறன் பயிற்சி | 38 |
| 13 | பேச்சு, உடற்பயிற்சி (Physiotherapy) | 16 |
| | மொத்த பயனாளிகள் | 471 |

## கல்வி : (Education)

மாற்றுத்திறனாளி குழந்தைகள் சமுதாயத்தில் சம உரிமையுடன், தன்னம்பிக்கையுடன், எதிர்காலத்தில் மற்றவரின் உதவியின்றி வாழவும், சமுதாயத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் கல்வி எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. இக்கல்வியின் மூலம் மாற்றுத்திறனாளிகள் வாழ்க்கை நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம் ஒருங்கிணைந்த கல்வி பெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் 44 சதவிகிதம் பள்ளிகள் மாற்றுத்திறனாளி குழந்தைகள் பயன்பெற முடியாத நிலையில் தான் உள்ளது.

நம்முடைய நாட்டில் பத்தில் ஒரு பங்கு மக்கள் மாற்றுத் திறனாளிகளை உள்ளடக்கியுள்ளது. மாற்றுத் திறனாளிகளை பயிற்றுவிப்பது, பயிற்சி அளிப்பது என்பது ஒரு சாதாரண செயல் அல்ல, அது ஒரு சிறப்பு செயலாகும் அதற்கு அர்ப்பணிப்பும், தியாகமும் அதிகம் தேவைப்படுகிறது. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வியையும், வேலைவாய்ப்பையும் தொடர்ந்து அளித்திட இத்திட்டத்தின் வழியாக சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு சமுதாயத்தில் மாற்றதை கொண்டு வருகிற அல்லது தனிமனித வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டு வருகின்ற திறனும் ஆற்றலும் ஒரு ஆசிரியருக்கு மட்டும் தான் உண்டு. எந்த ஒரு கல்வி நிறுவனமானாலும் ஆசிரியர்கள் மாற்றுத் திறனாளி குழந்தைகளை சிறப்பு கவனத்தில் எடுத்துக் கொண்டு, அவைகளை நன்முறையில் வளர்த்தெடுக்க வேண்டும். மாற்றுத் திறனாளி குழந்தைகளின் தேவைகளை நிவர்த்தி செய்து அவர்கள் கல்வி கற்க ஏதுவான சூழலை ஏற்படுத்தி கொடுப்பதற்கும், அவர்களுக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு போதுமான பயிற்சிகளையும், திறன் வளர்ப்பு பயிற்சிகளையும், தங்களுடைய துறை சார்ந்த அறிவையும் வளர்த்தெடுக்க அரசு மற்றும் அரசுசாரா பிற நிறுவனங்களின் மூலம் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் கல்வித்திட்டங்கள் வழங்கப்படுகிறது. பல நேரங்களில் மாற்றுத் திறனாளர் மாணவர்களுக்கான ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் போதும் பயிற்சி அளிக்கும் போதும் நாம், துவக்கநிலை, மற்றும் ஆரம்ப கல்வியில் மட்டும் தான் கவனம் செலுத்துகின்றோம்.

தொடர்ந்து மேல்நிலை, மற்றும் உயர்நிலை கல்வியில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான ஆசிரியர்களை நாம் போதிய அளவில் பயிற்றுவிக்கவில்லை. இவர்களை பயிற்றுவிக்க தவறியதின் விளைவாகத்தான் உயர்கல்வி, மேல்நிலைக் கல்வியில் அதிகப்படியான மாற்றுத்திறனாளி மாணவர்கள் கல்வி பெற இயலாத நிலை உள்ளது. இச்சூழலில் சி.பி.ஆர் திட்ட களப்பணியாளர்களின் தொடர் முயற்சியால் 112 மாற்றுத்திறனாளி குழந்தைகள் பள்ளி இடைநிற்றல் இல்லாமல் கண்காணிக்கப்பட்டு தொடர்ந்து கல்வி கற்று வருகின்றனர். இத்திட்டத்தின் மூலம் அனைத்து நிலை பள்ளி ஆசிரியர்களுக்கும் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## வாழ்வாதாரம் : (Livelihood)

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் வழியாக ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளையும் உள்ளூர் வளங்களை கொண்டு தொழில்முனைவோராக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றது. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் தொழில் முனைவோ. பெரும் பங்களிப்பை அளிப்பவர்களாக இருக்கின்றன. இச்சூழலில் மாற்றுத் திறனாளிகளும் அவரவர்களுடைய திறமையினடிப்படையில் சுயதொழில்களை துவங்குகின்றன. ஆனாலும் சாதாரண தொழில் முனைவோரோடு போட்டியிடுவதற்கு அவர்கள் பெரிதும் போராடுகின்றன மற்றவர்களைப் போல தொழில் செய்யும் போது மாற்றுத் திறனாளிகள், நிதி சுமை, உதவியின்மை, பற்றாக்குறை, சந்தைபடுத்த முடியாமை, போன்ற ஏராளமான பிரச்சனைகளாலும், தடைகளாலும் உடலளவிலும், மனதளவிலும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இந்நிலையில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு துறைகளின் மூலம் கிடைக்கக்கூடிய திட்டங்களில் மாற்றுத்திறனாளிகளை இணைத்து பயன்பெற இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி கீழ்கண்ட திட்டங்களில் மாற்றுத்திறனாளிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

- மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைத்திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளை இணைத்தல்.
- மாற்றுத்திறனாளிகள் இடஒதுக்கீட்டின்படி அரசின் அனைத்து துறைகளிலும் அரசுத் திட்டங்களை பெற்றுத் தருதல்.
- சுய தொழில் செய்வதற்காக மாற்றுத்திறனாளிகளுக்கு வங்கிக்கடன் மற்றும் திட்ட கடன் பெற்றுத் தருதல்.
- மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர அரசு உதவித்தொகையை பெறச்செய்தல்
- திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல்

மேற்கண்ட திட்டங்களின் மூலம் கடந்த ஓராண்டில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- அரசின் மாற்றுத்திறனாளர் உதவித்தொகை பெற்றவர்கள் - 56
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத்திட்டத்தில் பயன்பெற்றவர்கள் - 48
- பராமரிப்பு உதவித்தொகை பெற்றவர்கள் - 67
- தனிநபர் கழிவறை திட்டம் பெற்றவர்கள் - 14
- கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் சுயதொழில் கடன் பெற்றவர்கள் - 16
- தொழில் செய்வதற்கான வட்டியில்லா கடன் பெற்றவர்கள் (PLF வழியாக) (ரூ. 2000 முதல் ரூ. 15,000 வரை) - 52
- பசுமை வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பயன்பெற்றவர்கள் - 12
- தையல் இயந்திரம் பெற்றவர்கள் - 26
- ஆடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் கடன் பெற்றவர்கள் - 7
- சமையல் எரிவாயு இணைப்பு பெற்றவர்கள் - 01

## சமூகம் : (Social)

இந்திய சமூகம் என்பது உட்புறத்திலேயே பாகுபாடு நிறைந்த, வேறுபாடுகளுடன் கூடிய ஒரு சமூகமாகும். இந்த சமூகம், தன்னுடைய புவியியல் எல்லைக்குள் சாதி, வகுப்பு, பாலினம், மதம் கலாச்சாரம் பழக்கவழக்கங்கள், பாரம்பரியம் போன்றவைகளுக்கு இடமளிக்கின்றது. இந்த பிரிவினைவாதமானது ஏராளமான குறைபாடுகளின் வடிவங்களை இணைத்து பல்வேறுவிதமான பாகுபாடுகளை அனுபவிக்க அழைப்பு விடுக்கின்றது. இது போன்ற பாகுபாடு அனுபவங்கள் சாதி, மதம், வகுப்பு, பாலினம், இனம், கலாச்சாரம், போன்றவைகளையும் தாண்டி பாடுபடுகின்றன.

இது போன்ற பாகுபாடுகளை பின்பற்றும் அனுபவங்களை மாற்றுத் திறனாளிகளும் இந்த சமுதாயத்தில் அனுபவிக்கின்றனர். மேலும் மக்கள் மத்தியில் தரக்குறைவான பார்வையும் மற்றவர்களோடு சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலையும், பழைய சிந்தனையும் மாற்றுத் திறனாளிகளை இன்னும் வலுவற்றவர்களாக மாற்றுகின்றது. அதிலும் குறிப்பாக பெண்கள் ஒன்றிற்கு மேற்பட்ட குறைபாடுகளை கொண்டிருந்தால் அவர்கள் ஊனமுற்றோராகவும் ஒரு பெண்ணாகவும், இரட்டை ஒடுக்கு முறைக்கு ஆளாகிறார்கள். ஆணாதிக்க சமுதாயத்தின் அடக்கு முறை இன்னமும் நடைமுறையில் இருப்பதால், கலாச்சாரம், தீட்டு என்ற பெயரில் பெண்கள் இன்னும் அதிகமாக ஒடுக்கப்படுகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் கிராமப்புர மக்களிடையே மாற்றுத்திறனாளிகளின் நிலையை உயர்த்துதல், மாற்றுத்திறனாளர் வாழ்வியல் நிலைகள் பற்றிய விழிப்புணர்வு, மாற்றுத்திறனாளிகளுக்கான சட்டம் குறித்த தெளிவு, கிராமசபை கூட்டங்களில் பங்கெடுத்தல், கிராம விழாக்கள், குடும்ப விழாக்கள் ஆகியவற்றில் கலந்துக்கொண்டு சமுதாய நிகழ்வுகளில் தங்களையும் இணைத்துக்கொள்கின்றனர்.

இதன் ஒரு பகுதியாக 04.04.2022 அன்று சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் முயற்சியால் திட்ட கிராமங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களையும் சென்னை கடற்கரை, பெசன்ட் நகர் திருக்கோயில்கள் போன்ற இடங்களை பார்வையிட வாகன ஏற்பாடு செய்து அழைத்து செல்லப்பட்டது. 55 மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் கலந்துக்கொண்டு இடங்களை பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

## மேம்பாடு : (Empowerment)

ஒரு அமைப்பின் நோக்கம் என்பது கடைநிலையில் உள்ளோரையும் மேம்பாடு அடையச் செய்வதாகும். வாலாஜபாத் மற்றும் திருப்போரூர் ஒன்றியங்களில் உருவாக்கப்பட்ட மாற்றுத்திறனாளர் குழுக்களை ஒன்றிணைத்து இரு மாவட்ட கூட்டமைப்புகளாக உருவாக்கி மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்களை பெற்றுத் தருதல் மற்றும் அவர்களின் பொதுத்தேவைகளை அவர்களாகவே நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும் எனும் முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் குழுக்களின் விவரங்கள்:

| வ.எண் | மாவட்டம் | ஒன்றியம் | கிராமங்கள் | குழுக்கள் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | வாலாஜபாத் | 45 | 36 | 442 |
| 2 | செங்கல்பட்டு | திருப்போரூர் | 40 | 39 | 504 |

## சிறப்பு செயல்பாடுகள்:

### 1. அகில உலக மாற்றுத்திறனாளிகள் தினம் - 2021

03.12.2021 அன்று அகில உலக மாற்றுத்திறனாளிகள் தினம் வாலாஜாபாத் மற்றும் திருப்போரூர் ஆகிய ஒன்றியங்களில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. சி.பி.ஆர் திட்ட இந்திய தலைவர் மற்றும் ஜெர்மனி திட்ட செயலர் ஆகியோர் விடியோ காணொலி மூலம் மாற்றுத்திறனாளிகளை தொடர்பு கொண்டு உரையாற்றினர். தொடர்ந்து மாற்றுத்திறனாளி குழந்தைகளின் திறமைகளை அங்கீகரிக்கும் வண்ணம் நடன நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள், பஞ்சாயத்து தலைவர்கள், அரசு பணியாளர்கள், திட்டப்பணியாளர்கள் என 200க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டனர்.

இதன் ஒரு பகுதியாக 04.04.2022 அன்று சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் முயற்சியால் திட்ட கிராமங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களையும் சென்னை கடற்கரை, பெசன்ட் நகர் திருக்கோயில்கள் போன்ற இடங்களை பார்வையிட வாகன ஏற்பாடு செய்து அழைத்து செல்லப்பட்டது. 55 மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் கலந்துக்கொண்டு இடங்களை பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

### 2. புயல் நிவாரணப்பணிகள்

செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் 2021 அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அதிக மழையின் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு குடியிருப்புகள் சேதம் அடைந்தது. குறிப்பாக மாற்றுத்திறனாளிகளின் குடிசைகள் அதிகளவில் சேதம் அடைந்து தங்குவதற்கு பெரும் சிரமத்திற்குள்ளாகி அவதிப்பட்டனர். இந்நிலையில் சி.ஆர்.டி.எஸ் நிறுவன சிபிஆர் பணியாளர்கள் பாதிக்கப்பட்டவர்களின் அருகில் உள்ள தனியார் நிறுவனங்களின் உதவியுடன் 168 மாற்றுத்திறனாளிகளுக்கு தார்ப்பாய், மளிகைப்பொருட்கள், போர்வை ஆகிய பொருட்களை நிவாரணப்பொருட்களாக பெற்று பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு வழங்கினார்கள். இப்பணிக்கு FLEX மற்றும் இதர நிறுவனங்கள் பொருள் உதவி செய்தனர்.

## 7. காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் - புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சார திட்டம் (Cancer Awarness Programme)

### புற்றுநோய்

புற்றுநோய் என்பது கேடுதரும் உடற்கட்டிகளால் ஏற்படும் பல நோய்களின் ஒரு பொதுவான பெயர் ஆகும். இயல்புக்கு மாறாக கட்டுபாடற்று உயிரணுக்கள் பிரிந்து பெருகுவதால் இழையங்களில் ஏற்படும் மிகைப்பெருக்கம் அருகிலுள்ள இழையங்களில் ஊடுருவி பல்வேறு உடற்பகுதிக்கும் பரவும் ஆற்றலைக் கொண்டிருப்பின் உணர்ச்சியற்ற மருக்கள், மச்சம், தழும்புகள், கேடுதரும் கட்டிகள் அல்லது புற்றுநோய் எனப்படும்.

### புற்றுநோய்க்கான காரணம்

புகை பிடித்தல், புகையிலை பயன்படுத்துதல், மது அருந்துதல், போதை பொருட்களை பயன்படுத்துதல், அணுமின் உலை கதிர்வீச்சு, செல்போன் டவர்கள், டயர் தொழிற்சாலைகள், விவசாயத்தில் இரசாயன பொருட்கள் பயன்பாடு, துரித உணவு, ஒரே எண்ணெய்யில் பலமுறை பலவகை பலகாரங்கள் தயாரிப்பது, எண்ணெய்யில் தயாரிக்கப்பட்ட பொருட்களை கருப்பு மை அச்சிட்ட காகிதத்தில் மடிப்பது, அதிக கொழுப்பு நிறைந்த உணவுகளை உண்பது, உடற்பயிற்சி இன்மை, மரபு வழி போன்ற காரணிகளாலும் இந்நோய் பரவுகிறது. வைரஸ் தொற்று தாக்குதலாலும் புற்றுநோய் உருவாகிறது என மருத்துவ ஆய்வுகள் முன்வைக்கின்றன.

**நோய் அறிகுறிகள்:**

1.நோய் அறிகுறிகள்:

1. உடலில் மாற்றங்கள்
2. உடலில் கட்டி
3. சிறுநீரில் இரத்தம் கலந்து வருதல்
4. பெருங்குடல் வலி
5. மார்பகங்களில், கொப்பளம் (கட்டி)
6. தொடர் இருமல், மார்புவலி
7. மலத்துடன் இரத்தம்
8. மருவுபோல் கரும்புள்ளிகள்
9. திடீர் எடை கூடுதல்

**புற்றுநோய் வகைகள்:**

- மார்பக புற்றுநோய்
- கருப்பை வாய் புற்றுநோய்
- வாய்ப்புற்றுநோய்
- வயிற்று புற்றுநோய்
- மலக்குடல் ஆசனவாய்புற்றுநோய்
- நுரையீரல் புற்றுநோய்
- குரல்வளை புற்றுநோய்
- பெருங்குடல் புற்றுநோய்
- உணவுக்குழாய் புற்றுநோய்
- விந்து சுரப்பி புற்றுநோய்
- சிறுநீர்ப்பை புற்றுநோய்
- இரத்த புற்றுநோய்
- மூளை புற்றுநோய்
- கல்லீரல் புற்றுநோய்

புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சார திட்டத்தின் வழியாக தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளித்து அடையாள அட்டைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்

எவ்வளவு தான் நவீன மருத்துவ கண்டுபிடிப்புகள் இருந்தாலும் புற்றுநோய் இன்றளவும் ஒரு உயிர்கொல்லி நோயாகவே உள்ளது. ஏனெனில் உலகில் உள்ள நோய்களிலேயே புற்று நோயின் தாக்கத்தினால்தான் அதிகளவு உயிரிழப்பானது ஏற்படுகிறது என்று ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. உலக அளவில் புற்றுநோய் மனித இறப்புக்கான இரண்டாவது இடத்தில் இருப்பதாக அமெரிக்க புற்றுநோய் கழகம் தெரிவிக்கிறது.

புற்றுநோயை பொறுத்தவரை வருமுன் காப்பதுதான் சிறந்தது. இந்த சூழலில் கிராம மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி புற்றுநோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை குறைத்து புற்றுநோயில்லா எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கோடு காரிதாஸ் இந்தியா மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் இணைந்து புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சார திட்டம் தொடங்கப்பட்டது.

எழுவோம் இயக்கம் புற்றுநோய் விழிப்புணர்வு திட்டத்தின் மூலம் காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 2 மாவட்டங்களில் 7 ஒன்றியங்களிலுள்ள 18 கிராமங்களை தேர்வு செய்து புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு செயல்பாடுகளை செயல்படுத்தி வருகின்றது.

### திட்டத்தின் வழியாக வழங்கப்பட்ட பயிற்சிகள்:

- தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வலர்கள் மற்றும் பணியாளர்கள் களப்பார்வை செய்தல்
- பொது வாழ்க்கையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவன உறுப்பினர்களுக்கான பயிற்சி
- திட்ட பிரச்சாரம்
- புற்றுநோய் பரிசோதனை முகாம்கள்
- வலைபின்னல் கூட்டம்
- மத்திய அளவில் காலாண்டு ஒருங்கிணைப்பு கூட்டம்
- அரசு மற்றும் பிற சேவை துறைகளுடன் சந்திப்புகள்

### போதை மற்றும் குடிநோய் விழிப்புணர்வு பயிற்சி:

சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் சென்னை அடையாறில் உள்ள டி.டி.கே மருத்துவமனையுடன் இணைந்து கிராமப்புற மக்களுக்கான போதை மற்றும் குடிநோய் விழிப்புணர்வு குறித்த கருத்துக்களை விளக்கி குடிநோயினால் உண்டாகும் தீமைகள் மற்றும் போதை பழக்கத்திலிருந்து மீளுவதற்கான குடிநோய் ஆலோசனைகளை தொடர்ந்து வழங்கிவருகிறது அவ்வாறாக கடந்த ஓராண்டில் போதை மற்றும் குடிநோய் விழிப்புணர்வு பயிற்சிகள் ஒன்றியங்கள் வாரியாக வழங்கப்பட்ட கிராமங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | தேதி | ஒன்றியம் | கிராமம் | பங்கேற்பாளர் எண்ணிக்கை | விரிவுரையாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 07.02.2022 | மதுராந்தகம் | மலைப்பாளையம் | 110 | திருமதி.ராஜேஸ்வரி<br>திரு.முகேஷ்<br>திரு.சாலமன் |
| 2 | 08.02.2022 | காஞ்சிபுரம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | 65 | திமதி.மெட்டில்டா<br>திரு.அவினாஷ் |
| 3 | 15.02.2022 | வாலாஜாபாத் | வாரணவாசி | 64 | திருமதி.மெட்டில்டா<br>செல்வி.பூங்கொடி<br>திரு.அவினாஷ் |
| 4 | 25.02.2022 | இலத்தூர் | கடலூர் பெரிய குப்பம் | 73 | திருமதி.ஹெலன்<br>செல்வி.பூங்கொடி<br>திரு.அவினாஷ் |
| 5 | 05.03.2022 | திருக்கழுக்குன்றம் | பாண்டூர் கொள்ளைமேடு | 70 | திரு.அவினாஷ்<br>செல்வி.பூங்கொடி |
| 6 | 11.03.2022 | திருப்போரூர் | ஓரகடம் | 48 | திருமதி.ஹெலன்<br>திரு.அவினாஷ் |
| 7 | 14.03.2022 | அச்சரப்பாக்கம் | நேமம் | 68 | திரு.முரளி |
| | | | மொத்தம் | 498 | |

### அகில உலக புற்றுநோய் தினம்:

04.02.2022 அன்று காலை 11 மணியளவில் செங்கல்பட்டு சி.ஆர்.டி.எஸ் அறிவர். அம்பேத்கர் பயிற்சி கூடத்தில் அகில உலக புற்றுநோய் தினம் அனுசரிக்கப்பட்டது. சென்னை டி.டி.கே மருத்துவமனையின் மருத்துவ ஆலோசகர் திருமதி. வள்ளி அவர்கள் கலந்துக் கொண்டு புற்றுநோய் பற்றியும், அறிகுறிகள், காரணங்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இந்நிகழ்ச்சிக்கு சி.ஆர்.டி.எஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி. இ. அந்தோணிராஜ் அவர்கள் தலைமை வகித்தார். திட்ட மேலாளர் செல்வன். பாரத் அவர்கள் இந்நிகழ்வை சிறப்பாக வழிநடத்தினார். இதில் 50க்கும் மேற்ப்பட்டவர்கள் கலந்துக்கொண்டு புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை பெற்றனர்.

## 8. பெண்கள் கூட்டமைப்பு (Women Federation)

தமிழக சமூகப்பணி மையம் (Tasoss) வழிகாட்டுதலுடன் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள பெண்கள் ஒருங்கிணைக்கப்பட்டு கூட்டமைப்பாக செயல்பட்டு வருகின்றனர். இவ்வியக்கம் பெண்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் மற்றும் உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கத்திற்காக துவங்கப்பட்டு 570 குழுக்களுடன் 7681 உறுப்பினர்களைக் கொண்டு 103 ஊராட்சிகளில் 155 கிராமங்களில் செயல்பட்டு வருகின்றது. மாவட்ட கூட்டங்கள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றது. பெண்கள் உரிமை சார்ந்த வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சனைகளை எடுத்து செயல்படுத்திக்கொண்டு வருகின்றது.

### இயக்கத்தின் நோக்கம்:

- சமுதாயத்தில் வறுமை கோட்டிற்கு கீழுள்ள பின்தங்கிய ஒடுக்கப்பட்ட பெண்கள் ஒன்றுபட்டு சமூகப் பொருளாதார, அரசியல், கல்வி, கலாச்சாரம் மற்றும் சட்ட ரீதியான நிலைகளில் முழு ஈடுபாடு கொண்டு வாழ்வில் முன்னேற துணைபுரிதல்.
- பெண்களிடையே கூட்டமைபபின் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பெண்களுக்கான உரிமைகளை பெறவும், சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்டவும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- சமூக பிரச்சினைகள், அடிப்படை காரணங்களை ஆராய்ந்து அவற்றை தவிர்ப்பதற்காக வழிவகுத்தல்.
- அரசு அதிகாரிகளுடன் சமூக உறவை ஏற்படுத்தி பெண்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் சலுகைகளையும் அரசிடமிருந்து பெற்றுத் தருதல்.
- சமூகத்தில் நலிவுற்ற பெண்களின் நிலையை உயர்த்தவும், அரசியலிலும், நிர்வாக பொறுப்புகளில் பெண்கள் பங்கெடுக்கவும் கூட்டமைப்பு உறுப்பினர்களை வலுப்படுத்துதல்.
- பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஒத்த சிந்தனையுள்ள பிற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்.

### சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்பில் உள்ள பெண்களை அரசியலில் பங்கேற்க செய்தல்:

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் மூலமாக கடந்த 06.04.2021 அன்று நடந்த உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்பில் உள்ள பெண்களை ஊக்குவித்து பல்வேறு பயிற்சிகள் வழியாக உள்ளாட்சி தேர்தலில் பங்கேற்க வழிவகைகள் செய்யப்பட்டன. காஞ்சிபுரம் செங்கல்பட்டு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் சுமார் 250க்கும் மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்ற தேர்தலில். போட்டியிட்டனர். இவற்றில் தலைவர், வார்டு உறுப்பினர், கவுன்சிலர் என பல்வேறு பதவிகளில் போட்டியிட்டு 69 உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கான பாராட்டு விழா சி.ஆர்.டி.எஸ் நிறுவன இயக்குநர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பிக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டின் உள்ளாட்சி தேர்தலில் பெண்கள் கூட்டமைப்பின் வழியாக பயிற்சி பெற்று வெற்றிபெற்றவர்களின் பெயர்பட்டியல் பின்வருமாறு:

செங்கல்பட்டு மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டின் உள்ளாட்சி தேர்தலில் பெண்கள் கூட்டமைப்பின் வழியாக பயிற்சி பெற்று வெற்றிபெற்றவர்களின் பெயர்பட்டியல் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | ஒன்றியம் | பஞ்சாயத்து | கிராமம் | வெற்றிபெற்ற பெண்வேட்பாளர் பெயர் | பதவி |
|---|---|---|---|---|---|
| 1 | காட்டாங்கொளத்தூர் | பாலூர் | மேலச்சேரி | சரிதா | மாவட்ட கவுன்சிலர் |
| 2 | திருக்கழுக்குன்றம் | நல்லாத்தூர் | நல்லாத்தூர் | சுமதி | ஒன்றிய கவுன்சிலர் |
| 3 | இலத்தூர் | கொடூர் | கொடூர் | மணிமேகலை | ஒன்றிய கவுன்சிலர் |
| 4 | திருக்கழுக்குன்றம் | நல்லாத்தூர் | நல்லாத்தூர் | பிரமீளா | ஊராட்சி மன்ற தலைவர் |
| 5 | திருக்கழுக்குன்றம் | கடம்பாடி | கடம்பாடி | தேன்மொழி | ஊராட்சி மன்ற தலைவர் |
| 6 | திருக்கழுக்குன்றம் | ஆயப்பாக்கம் | ஆயப்பாக்கம் | ஆர்த்தி | ஊராட்சி மன்ற தலைவர் |
| 7 | அச்சிறுப்பாக்கம் | கீழாதூர் | கீழாதூர் | கனகா | ஊராட்சி மன்ற தலைவர் |
| 8 | காட்டாங்குளத்தூர் | பாலூர் | பாலூர் | நிர்மலா | ஊராட்சி மன்ற தலைவர் |
| 9 | சித்தாமூர் | தண்டலம் | தண்டலம் | விஜயா | ஊராட்சி மன்ற தலைவர் |
| 10 | திருக்கழுக்குன்றம் | நல்லாத்தூர் | நல்லாத்தூர் | எல்லம்மாள் | வார்டு உறுப்பினர் |
| 11 | திருக்கழுக்குன்றம் | நல்லாத்தூர் | நல்லாத்தூர் | மேரிவேலு | வார்டு உறுப்பினர் |
| 12 | திருக்கழுக்குன்றம் | நல்லாத்தூர் | நல்லாத்தூர் | ருக்குமணி | வார்டு உறுப்பினர் |
| 13 | திருக்கழுக்குன்றம் | பட்டிக்காடு | புலியூர் | பிரபாகரன் | வார்டு உறுப்பினர் |
| 14 | திருக்கழுக்குன்றம் | பட்டிக்காடு | புலியூர் | ஸ்ரீமாலதி | வார்டு உறுப்பினர் |
| 15 | திருக்கழுக்குன்றம் | கடம்பாடி | கடம்பாடி | மாலதி | வார்டு உறுப்பினர் |
| 16 | திருக்கழுக்குன்றம் | ஆயப்பாக்கம் | ஆயப்பாக்கம் | கோமதி | வார்டு உறுப்பினர் |
| 17 | திருக்கழுக்குன்றம் | ஆயப்பாக்கம் | ஆயப்பாக்கம் | மனோன்மணி | வார்டு உறுப்பினர் |
| 18 | திருக்கழுக்குன்றம் | ஆயப்பாக்கம் | ஆயப்பாக்கம் | சிவமணி | வார்டு உறுப்பினர் |
| 19 | திருக்கழுக்குன்றம் | ஆயப்பாக்கம் | ஆயப்பாக்கம் | பழனிமுருகன் | வார்டு உறுப்பினர் |
| 20 | திருக்கழுக்குன்றம் | ஆயப்பாக்கம் | ஆயப்பாக்கம் | பார்வதி | வார்டு உறுப்பினர் |
| 21 | திருக்கழுக்குன்றம் | ஆயப்பாக்கம் | ஆயப்பாக்கம் | சிவக்குமார் | வார்டு உறுப்பினர் |
| 22 | திருக்கழுக்குன்றம் | எடையூர் | கொக்கிலமேடு | ராசாத்தி | வார்டு உறுப்பினர் |
| 23 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | கேளம்பாக்கம் | வாணி | வார்டு உறுப்பினர் |
| 24 | திருப்போரூர் | ஒரகடம் | ஒரகடம் | இந்திரா | வார்டு உறுப்பினர் |
| 25 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | காட்டுக்கரணை | கீர்த்தனா | வார்டு உறுப்பினர் |
| 26 | அச்சிறுப்பாக்கம் | பாப்பநல்லூர் | பாப்பநல்லூர் | ஜெயமேரி | வார்டு உறுப்பினர் |
| 27 | அச்சிறுப்பாக்கம் | திம்மாபுரம் | திம்மாபுரம் | வெங்கடேஷ்வரி | வார்டு உறுப்பினர் |
| 28 | அச்சிறுப்பாக்கம் | அத்திவாக்கம் | நேமம் | மாலினி | வார்டு உறுப்பினர் |
| 29 | அச்சிறுப்பாக்கம் | அத்திவாக்கம் | நேமம் | ராஜேஸ்வரி | வார்டு உறுப்பினர் |
| 30 | அச்சிறுப்பாக்கம் | சிறுபேர்பாண்டி | சிறுபேர்பாண்டி | சாந்தி | வார்டு உறுப்பினர் |
| 31 | அச்சிறுப்பாக்கம் | சிறுபேர்பாண்டி | சிறுபேர்பாண்டி | சுந்தரி | வார்டு உறுப்பினர் |
| 32 | அச்சிறுப்பாக்கம் | மொறப்பாக்கம் | மொறப்பாக்கம் | ஜெயந்தி | வார்டு உறுப்பினர் |
| 33 | இலத்தூர் | கொடூர் | கொடூர் | ரேவதி | வார்டு உறுப்பினர் |
| 34 | இலத்தூர் | கொடூர் | கொடூர் | சந்தியா | வார்டு உறுப்பினர் |
| 35 | இலத்தூர் | பச்சம்பாக்கம் | பசுவந்தம் | சிவகாமி | வார்டு உறுப்பினர் |
| 36 | இலத்தூர் | பச்சம்பாக்கம் | பசுவந்தம் | ஒவ்வி | வார்டு உறுப்பினர் |
| 37 | இலத்தூர் | நெல்வாய்பாளையம் | குமாரகுப்பம் | மாரியம்மாள் | வார்டு உறுப்பினர் |
| 38 | இலத்தூர் | சீவாடி | சீவாடி | லலிதா | வார்டு உறுப்பினர் |
| 39 | மதுராந்தகம் | தச்சூர் | தச்சூர் | அம்மு | வார்டு உறுப்பினர் |
| 40 | காட்டாங்கொளத்தூர் | ஆலப்பாக்கம் | இருங்குன்றப்பள்ளி | மைதிலி | வார்டு உறுப்பினர் |
| 41 | காட்டாங்கொளத்தூர் | பாலூர் | மேல்மணம்பாக்கம் | காந்திமதி | வார்டு உறுப்பினர் |
| 42 | காட்டாங்கொளத்தூர் | பாலூர் | மேல்மணம்பாக்கம் | சண்முகசுந்தர் | வார்டு உறுப்பினர் |
| 43 | காட்டாங்கொளத்தூர் | பாலூர் | மேல்மணம்பாக்கம் | சுதா | வார்டு உறுப்பினர் |
| 44 | மதுராந்தகம் | கிணார் | கே. கே. புதூர் | வைலட்ராணி | வார்டு உறுப்பினர் |
| 45 | சித்தாமூர் | கீழ்மருவத்தூர் | கீழ்மருவத்தூர் | தமிழ்செல்வி | வார்டு உறுப்பினர் |

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டின் உள்ளாட்சி தேர்தலில் பெண்கள் கூட்டமைப்பின் வழியாக பயிற்சி பெற்று வெற்றிபெற்றவர்களின் பெயர்பட்டியல் விவரம் பின்வருமாறு:**

| வ. எண் | ஒன்றியம் | பஞ்சாயத்து | கிராமம் | வெற்றிபெற்ற பெண்வேட்பாளர் பெயர் | பதவி |
|---|---|---|---|---|---|
| 1 | வாலாஜாபாத் | சிறுவாக்கம் | சிறுவாக்கம் | சகுந்தலா | ஊராட்சி மன்ற தலைவர் |
| 2 | உத்திரமேரூர் | கருவேப்பம்பூண்டி | கருவேப்பம்பூண்டி | தனலட்சுமி முருகேசன் | ஊராட்சி மன்ற தலைவர் |
| 3 | உத்திரமேரூர் | ஒட்டந்தாங்கல் | ஒட்டந்தாங்கல் | [illegible] | ஊராட்சி மன்ற தலைவர் |
| 4 | உத்திரமேரூர் | புலியூர் | புலியூர் | சாந்தி | ஊராட்சி மன்ற தலைவர் |
| 5 | உத்திரமேரூர் | தளவராம்பூண்டி | தளவராம்பூண்டி | சாந்தி | ஊராட்சி மன்ற தலைவர் |
| 6 | காஞ்சிபுரம் | திம்மசமுத்திரம் | திம்மசமுத்திரம் | பிரியா | வார்டு உறுப்பினர் |
| 7 | காஞ்சிபுரம் | [illegible] | [illegible] | சுலோச்சனா | வார்டு உறுப்பினர் |
| 8 | காஞ்சிபுரம் | பெரும்பாக்கம் | பெரும்பாக்கம் | சங்கீதா | வார்டு உறுப்பினர் |
| 9 | வாலாஜாபாத் | சிறுவாக்கம் | புதுகாலனி | கோகிலா | வார்டு உறுப்பினர் |
| 10 | வாலாஜாபாத் | சிறுவாக்கம் | பாரதிநகர் | தேவி | வார்டு உறுப்பினர் |
| 11 | வாலாஜாபாத் | வாரணவாசி | வாரணவாசி | [illegible] | வார்டு உறுப்பினர் |
| 12 | உத்திரமேரூர் | கருவேப்பம்பூண்டி | கருவேப்பம்பூண்டி | தமிழரசி | வார்டு உறுப்பினர் |
| 13 | உத்திரமேரூர் | கருவேப்பம்பூண்டி | கருவேப்பம்பூண்டி | கௌசல்யா | வார்டு உறுப்பினர் |
| 14 | உத்திரமேரூர் | மருதம் | மருதம் | ரோஸ்மேரி | வார்டு உறுப்பினர் |
| 15 | உத்திரமேரூர் | புலியூர் | புலியூர் | மீனா | வார்டு உறுப்பினர் |
| 16 | உத்திரமேரூர் | புலியூர் | ஜெ.பி.நகர் | [illegible] | வார்டு உறுப்பினர் |
| 17 | உத்திரமேரூர் | கம்மாளம்பூண்டி | கம்மாளம்பூண்டி | [illegible] | வார்டு உறுப்பினர் |
| 18 | உத்திரமேரூர் | ஒட்டந்தாங்கல் | புத்தண்டலம் | ரேவதி | வார்டு உறுப்பினர் |
| 19 | உத்திரமேரூர் | ஒட்டந்தாங்கல் | புத்தண்டலம் | [illegible] | வார்டு உறுப்பினர் |
| 20 | உத்திரமேரூர் | ஒட்டந்தாங்கல் | புத்தண்டலம் | [illegible] | வார்டு உறுப்பினர் |
| 21 | உத்திரமேரூர் | திருவானைக்கோவில் | திருவானைக்கோவில் | அம்பிகா | வார்டு உறுப்பினர் |
| 22 | உத்திரமேரூர் | திருவானைக்கோவில் | திருவானைக்கோவில் | [illegible] | வார்டு உறுப்பினர் |
| 23 | உத்திரமேரூர் | தளவராம்பூண்டி | வினோபா நகர் | [illegible] | வார்டு உறுப்பினர் |
| 24 | உத்திரமேரூர் | இராவத்தநல்லூர் | ஆர்.என்.கண்டிகை | [illegible] | வார்டு உறுப்பினர் |

**சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்பின் கீழ் செயல்படும் குழுக்களின் விவரம்:**

| வ. எண் | ஒன்றியம் | பஞ்சாயத்து | கிராமம் | குழு எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | 15 | 24 | 79 | 1069 |
| 2 | திருப்போரூர் | 10 | 14 | 64 | 791 |
| 3 | காட்டாங்கொளத்தூர் | 7 | 7 | 28 | 386 |
| 4 | வாலாஜாபாத் | 5 | 16 | 50 | 613 |
| 5 | இலத்தூர் | 10 | 12 | 52 | 769 |
| 6 | மதுராந்தகம் | 4 | 5 | 20 | 301 |
| 7 | சித்தாமூர் | 7 | 7 | 17 | 238 |
| 8 | காஞ்சிபுரம் | 11 | 15 | 60 | 784 |
| 9 | திருக்கழுக்குன்றம் | 12 | 21 | 61 | 639 |
| 10 | அச்சிறுப்பாக்கம் | 14 | 21 | 60 | 953 |
| 11 | கடற்கரை பகுதி | 8 | 13 | 30 | 493 |
| | மொத்தம் | 103 | 155 | 521 | 7026 |

**சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்பு மூலமாக நேரடிக்கடன் பெற்ற குழுக்களின் விவரம்:**

| வ.எண் | ஒன்றியம் | கிராமம் | குழுவின் பெயர் | வங்கி விவரம் | கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வாலாஜாபாத் | வாரணவாசி | முத்தமிழ் | இந்தியன் வங்கி-<br>வாலாஜாபாத் | 6.50.000 |
| 2 | வாலாஜாபாத் | வாரணவாசி | அன்பு தமிழ் | இந்தியன் வங்கி<br>வாலாஜாபாத் | 5.50.000 |
| 3 | வாலாஜாபாத் | வாரணவாசி | தமிழ்முரசு | இந்தியன் வங்கி<br>வாலாஜாபாத் | 7.20.000 |
| 4 | வாலாஜாபாத் | வாரணவாசி | காவியமலர்-1 | இந்தியன் வங்கி<br>வாலாஜாபாத் | 8.40.000 |
| 5 | வாலாஜாபாத் | வாரணவாசி | காவியமலர்-2 | இந்தியன் வங்கி<br>வாலாஜாபாத் | 7.20.000 |
| 6 | வாலாஜாபாத் | வாரணவாசி | செந்தமிழ் | இந்தியன் வங்கி<br>வாலாஜாபாத் | 8.40.000 |
| 7 | வாலாஜாபாத் | வாரணவாசி | இசைத்தமிழ் | இந்தியன் வங்கி<br>வாலாஜாபாத் | 7.20.000 |
| 8 | வாலாஜாபாத் | அவளூர் | புரட்சி | இந்தியன் வங்கி<br>ஏனாத்தூர் | 10.79.000 |
| 9 | வாலாஜாபாத் | அவளூர் | காவேரி | இந்தியன் வங்கி<br>ஏனாத்தூர் | 8.40.000 |
| 10 | வாலாஜாபாத் | கௌரியம்மன்<br>பேட்டை | ஓம் சரவணா | இந்தியன் வங்கி<br>ஏனாத்தூர் | 7.20.000 |
| 11 | வாலாஜாபாத் | கௌரியம்மன்<br>பேட்டை | ஸ்ரீராம் | இந்தியன் வங்கி<br>ஏனாத்தூர் | 8.40.000 |
| 12 | வாலாஜாபாத் | கௌரியம்மன்<br>பேட்டை | காவியம் | இந்தியன் வங்கி<br>ஏனாத்தூர் | 7.50.000 |
| 13 | வாலாஜாபாத் | கௌரியம்மன்<br>பேட்டை | விடிவெள்ளி | இந்தியன் வங்கி<br>ஏனாத்தூர் | 7.50.000 |
| 14 | காஞ்சிபுரம் | குருவிமலை | மீனாட்சியம்மன் | KCCB Bank | 9.90.000 |
| 15 | காஞ்சிபுரம் | விப்பேடு | இமயம் | PACB Bank<br>விப்பேடு | 4.00.000 |
| 16 | காஞ்சிபுரம் | விப்பேடு | தங்கமலர் | PACB Bank<br>விப்பேடு | 4.00.000 |
| 17 | காஞ்சிபுரம் | கன்னியம்மன் குட்டை | இமயம் | இந்தியன் வங்கி | 6.50.000 |
| 18 | காஞ்சிபுரம் | திம்மசமுத்திரம் | முல்லை | இந்தியன் வங்கி | 7.50.000 |
| 19 | காஞ்சிபுரம் | திம்மசமுத்திரம் | சுடர் | இந்தியன் வங்கி | 7.50.000 |
| 20 | காஞ்சிபுரம் | சமத்துவபுரம் | செம்பருத்தி | இந்தியன் வங்கி | 3.50.000 |
| 21 | காஞ்சிபுரம் | ஏரிவாக்கம் | தீபம் | KCCB Bank | 3.90.000 |
| 22 | காஞ்சிபுரம் | திருப்பருத்திகுன்றம் | விடியல் | KCCB Bank | 1.20.000 |
| 23 | காஞ்சிபுரம் | திருப்பருத்திகுன்றம் | அறிஞர் அண்ணா | KCCB Bank | 1.40.000 |
| 24 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | முனீஸ்வரா | இந்தியன் வங்கி<br>இராமாபுரம் | 8.00.000 |
| 25 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | ரோஜா | இந்தியன் வங்கி<br>இராமாபுரம் | 6.00.000 |
| 26 | அச்சிறுப்பாக்கம் | எலப்பாக்கம் | குணவதி | இந்தியன் வங்கி<br>இராமாபுரம் | 10.00.000 |
| 27 | அச்சிறுப்பாக்கம் | முனியந்தாங்கல் | முல்லை | இந்தியன் வங்கி<br>இராமாபுரம் | 7.50.000 |
| 28 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | முல்லை | IOB Bank<br>அச்சிறுப்பாக்கம் | 4.00.000 |
| 29 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | தீபம் | IOB Bank<br>அச்சிறுப்பாக்கம் | 4.00.000 |
| 30 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | தாழம்பூ | இந்தியன் வங்கி<br>இராமாபுரம் | 8.00.000 |

#### சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்பு மூலமாக நேரடிக்கடன் பெற்ற குழுக்களின் விவரம்:

| வ.எண் | ஒன்றியம் | கிராமம் | குழுவின் பெயர் | வங்கி விவரம் | கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 31 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | சாமந்தி | இந்தியன் வங்கி<br>இராமாபுரம் | 11,00,000 |
| 32 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | மலர்கள் | இந்தியன் வங்கி<br>இராமாபுரம் | 8,00,000 |
| 33 | உத்திரமேரூர் | ஜோதி நகர் | விண்மீன்கள் | இந்தியன் வங்கி | 3,00,000 |
| 34 | உத்திரமேரூர் | | செம்பருத்தி | இந்தியன் வங்கி | 3,50,000 |
| 35 | உத்திரமேரூர் | மல்லிகாபுரம் | வெற்றி | இந்தியன் வங்கி | 1,00,000 |
| 36 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | பெண்கள் | IOB Bank<br>உத்திரமேரூர் | 3,90,000 |
| 37 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | அட்சயக்கனம் | IOB Bank<br>உத்திரமேரூர் | 3,60,000 |
| 38 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | இமயம் | IOB Bank<br>உத்திரமேரூர் | 3,60,000 |
| 39 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | திருவள்ளுவர் | IOB Bank<br>உத்திரமேரூர் | 6,50,000 |
| 40 | உத்திரமேரூர் | உத்திரமேரூர் நகரம் | ரோஜா | IOB Bank<br>உத்திரமேரூர் | 7,80,000 |
| 41 | சித்தாமூர் | தண்டலம் | தென்றல் | IOB Bank<br>தண்டலம் | 8,40,000 |
| 42 | சித்தாமூர் | கீழ்மருவத்தூர் | புரட்சி பாரதி | இந்தியன் வங்கி | 8,00,000 |
| 43 | சித்தாமூர் | தண்டலம் | மகாலட்சுமி | IOB Bank<br>தண்டலம் | 6,00,000 |
| 44 | சித்தாமூர் | தண்டலம் | வீட்டல் மல்லி | IOB Bank<br>தண்டலம் | 8,00,000 |
| 45 | சித்தாமூர் | தேன்பாக்கம் | மலரும்<br>மொட்டுகள் | இந்தியன் வங்கி | 6,00,000 |
| 46 | மதுராந்தகம் | மலைப்பாளையம் | வெற்றிரோஜா | இந்தியன் வங்கி | 9,00,000 |
| 47 | காட்டாங்கொளத்தூர் | மேல்மணம்பாக்கம் | ஓம்சக்தி | KVB Bank | 5,00,000 |
| 48 | காட்டாங்கொளத்தூர் | மேல்மணம்பாக்கம் | சிகரம் | KVB Bank | 7,00,000 |
| 49 | காட்டாங்கொளத்தூர் | மேல்மணம்பாக்கம் | ஓம்சாய்ராம் | KVB Bank | 1,50,000 |
| 50 | காட்டாங்கொளத்தூர் | பாலூர் | நெற்களஞ்சியம் | PACB Bank | 4,25,000 |
| 51 | காட்டாங்கொளத்தூர் | பாலூர் | தாழம்பூ | PACB Bank | 4,00,000 |
| | | | | மொத்தம் | 3,07,94,000 |

#### சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்பின் அகில உலக பெண்கள் தினவிழா - 2022

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் மற்றும் செங்கல்பட்டு கிராமப்புற பெண்கள் முன்னேற்ற இயக்கம் இணைந்து 08.03.2022 அன்று (செவ்வாய் கிழமை) செங்கல்பட்டு மறைமாவட்டத்தின் **ஆயர் மேதகு. அ. நீதிநாதன்** ஆண்டகை அவர்களின் தலைமையில் அகில உலக பெண்கள் தினவிழா - 2022 "பெண்ணிய பார்வையில் சமூகநீதி" என்ற தலைப்பில் சி.ஆர்.டி.எஸ் அறிவர். அம்பேத்கர் பயிற்சியரங்கத்தில் வெகுசிறப்பாக ஒன்றிய கூட்டமைப்பு தலைவர்களால் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வின் சிறப்பு அழைப்பாளர்களாக **பேரருட்பணி. ஞா.பாக்கிய ரெஜிஸ்** (ஆயரின் பொதுபதில் குரு. செங்கை மறைமாவட்டம்), **செல்வி. மெட்டில்டா**, (டி.டி.கே மருத்துவமனை, சென்னை), **திருமதி. மேகலா**, வழக்கறிஞர் (மக்கள் மன்றம்), **அருட்பணி. ஆரோக்கியசாமி** (டாசோஸ், துணை இயக்குநர்), **செல்வி. அருள்தேவி**, (14-வது வார்டு கவுன்சிலர், திம்மாவரம்), **திருமதி. கீதா** (வடக்கு மண்டல திட்ட அலுவலர், டாசோஸ்) ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

நிறுவன இயக்குநர் **அருட்பணி.இ.அந்தோணிராஜ்** அவர்கள் இந்நிகழ்வை சிறப்பாக வழிநடத்தினார். மகளிர் குழு உறுப்பினர்கள், கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், பணியாளர்கள் என மொத்தம் 100-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டு அகில உலக பெண்கள் நாளை சிறப்பித்தனர்.

## 2021 - 2022 பணி ஆண்டில் ஏற்படுத்திய புதிய குழுக்கள் விவரம்:

| வ. எண் | ஒன்றியம் | புதிய குழுக்கள் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | 3 | 41 |
| 2 | திருப்போரூர் | 7 | 91 |
| 3 | காட்டாங்கொளத்தூர் | 9 | 108 |
| 4 | வாலாஜாபாத் | 6 | 79 |
| 5 | இலத்தூர் | 0 | 0 |
| 6 | மதுராந்தகம் | 3 | 39 |
| 7 | சித்தாமூர் | 4 | 53 |
| 8 | காஞ்சிபுரம் | 4 | 54 |
| 9 | திருக்கழுகுன்றம் | 5 | 85 |
| 10 | அச்சிறுப்பாக்கம் | 2 | 30 |
| 11 | கடற்கரை பகுதி | 6 | 75 |
| | மொத்தம் | 49 | 655 |

| மொத்த குழுக்கள் | உறுப்பினர்கள் |
|---|---|
| 570 | 7681 |

## சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்பு மூலமாக அரசு திட்டங்கள் பெற்றவர்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | அரசு திட்டங்கள் | பயன்பெற்றவர்கள் |
|---|---|---|
| 1 | தொகுப்பு வீடு திட்டம் | 48 |
| 2 | தனிநபர் கழிவறை திட்டம் | 79 |
| 3 | உறிஞ்சி குழி | 75 |
| 4 | அரசு இலவச பட்டா | 77 |
| 5 | தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் | 110 |
| 6 | முதியோர் உதவித்தொகை | 25 |
| 7 | அரசு இலவச ஆடு திட்டம் | 16 |
| 8 | அரசு இலவச கறவை மாடு திட்டம் | 14 |
| 9 | மாட்டு கொட்டகை | 22 |
| 10 | ஊனமுற்றோர் உதவித்தொகை | 122 |
| 11 | தையல் இயந்திரம் | 22 |
| | மொத்தம் | 608 |

### SBI - வங்கியின் மூலம் இலவச தையல் இயந்திரம் வழங்கியது:

காஞ்சிபுரம் ஒன்றியத்தில் விப்பேடு கிராமத்தில் 20 ஆண்டுகளாக கணவனை பிரிந்து வாழும் திருமதி. சகுந்தலா அவர்கள் மற்றும் திருமதி. சித்ரா ஆகியோருக்கு தொழில் செய்து வருமானம் ஈட்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் ஓய்வுபெற்ற பணியாளர் சங்கத்தின் மூலம் 2 இலவச தையல் இயந்திரங்களை பெற்று சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் வழங்கியது. இதன் மூலம் இருவரும் மாதம் 3.000 ரூபாய் வரை வருமானம் ஈட்டி குடும்பத்தை பாதுகாக்கின்றனர்.

## 9. சிறப்பு செயல்பாடுகள்:

### டாக்டர். அம்பேத்கர் பிறந்த தினம்

13.04.2021 அன்று சி.ஆர்.டி.எஸ் அலுவலகத்தில் இயக்குநர் தலைமையில் பணியாளர்கள் அனைவரும் இணைந்து டாக்டர். அம்பேத்கர் பிறந்த தினத்தை சிறப்பித்தனர். சோகண்டி பங்கு தந்தை பணி. ஜேக்கப் அவர்கள் டாக்டர்.அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தார். இயக்குநர் அவர்கள் டாக்டர்.அம்பேத்கர் அவர்களைக் குறித்து ஒரு சில வார்த்தைகளை கூறி வீரவணக்கம் செலுத்தினார்.

### தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

24.04.2021 அன்று மதுராந்தகம் அருகே உள்ள மேலவலம்பேட்டை என்ற கிராமத்தில் மின்கசிவினால் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக இருபதிற்கும் மேற்பட்ட பழங்குடியினரின் குடிசைகள் எரிந்து சாம்பலாயின. பாதிக்கப்பட்டவர்களுக்கு செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டு சங்கத்தின் இயக்குநர் அவர்கள் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் வழங்கினார். மேலும் முதல் உதவியாக அவர்கள் குடிசை போட்டு தங்குவதற்கு தார்பாய்களை வழங்கினார். அதன்பிறகு மேலவலம்பேட்டை கிராம நிர்வாக அதிகாரிகளின் உதவியோடு செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டு சங்கத்தின் இயக்குநர் அந்தோணிராஜ் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் உதவியோடு அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள உதவினார்.

### ஆகஸ்டு - 10 துக்க நாள்:

10.08.2021 அன்று காலை 10 மணியளவில் மேய்ப்பு பணி நிலையம், ஆயர் இல்ல வளாகத்தில் பொதுக்கூட்டம் நடைப்பெற்றது.

- பட்டியலின கிறித்தவர் இட ஒதுக்கீட்டை மறுக்கும் ஜனாதிபதி ஆணை 1950, பத்தி 3-ஐ உடனே நீக்கம் செய்யவும்.
- பட்டியலின கிறித்தவர்களை SC பட்டியலில் சேர்க்கவும்.
- நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் அறிக்கையை அமல்படுத்தவும்.
- பட்டியலின கிறித்தவர்களை SC பட்டியலில் சேர்த்திட தமிழக அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பவும் வலியுறுத்தி கருத்தரங்கம் நடைப்பெற்றது.

இந்நிகழ்வில் 60க்கும் மேற்பட்ட தாய்மார்கள் மற்றும் சி.ஆர்.டி.எஸ் பணியாளர்கள் பங்கேற்றனர்.

### பணியாளர்கள் பணிநிறைவு விழா:

28.08.2021 அன்று சி.ஆர்.டி.எஸ் பணியாளர்கள் திருமதி. உதயகுமாரி, திருமதி. மேரி, திரு. வேளாங்கண்ணி ஆகியோர்களின் பணிநிறைவு விழா நடைப்பெற்றது. **சி.ஆர்.டி.எஸ் நிறுவன தலைவர் மேதகு. ஆயர். நீதிநாதன், இயக்குநர் தந்தை முனைவர். அந்தோணிராஜ், பள்ளியகரம் பங்கு தந்தை பணி. அமுல்ராஜ், பணி. கபிரியேல் மற்றும் பாத்தூர் பங்கு தந்தை பணி. லாரன்ஸ்** ஆகியோர் திருப்பலியில் பங்கு பெற்றனர். ஆயர் அவர்கள் பணியாளர்களுக்கு வாழ்த்துக் கூறி நன்றி செலுத்தி நினைவு பரிசினை வழங்கினார்.

## ஆண்டு பொதுக்குழு கூட்டம்:

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் 04.12.2021 அன்று காலை 10.30 மணியளவில் ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பொதுக்குழு கூட்டத்தில் சென்ற ஆண்டு அறிக்கை, வரவு செலவு கணக்குகள் வாசிக்கப்பட்டன. வாசிக்கப்பட்ட இந்த ஆண்டு அறிக்கையில் இருந்து சந்தேகங்கள் எழுந்தன. சந்தேகங்களுக்கு ஆயர் அவர்கள் உரிய பதிலை அளித்தார். இக்கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள், பங்கு தந்தையர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் என 44 பேர் பங்கு பெற்றார்கள். மதியம் 1 மணிக்கு தமிழ்தாய் வாழ்த்து பாடலுடன் கூட்டம் இனிதே முடிவுப்பெற்றது.

## கைம்பெண்களுக்கான கிறிஸ்து பிறப்பு விழா:

15.12.2021 அன்று புதன்கிழமை கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு நம் மறைமாவட்ட மக்கள் ஆயரின் தலைமையில் கிராமப்புற பங்குகளில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள ஏழைக்கைம்பெண்கள் மற்றும் விதவை தாய்மார்களுக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் ஒவ்வொரு பங்குகளில் இருந்தும் 5 விதவைத்தாய்மார்கள் வருகை புரிந்தனர். மொத்தம் 220 பேர் பங்கேற்றார்கள். ரூபாய் 2.50.000 மதிப்புள்ள கிறிஸ்மஸ் பரிசுப்பொருட்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

## கல்லூரி மாணவர்களின் களப்பணி பங்கேற்பு:

சென்னை கிறித்தவ கல்லூரி, சென்னை இலயோலா கல்லூரி, சென்னை குருநானக் கல்லூரி, சென்னை வைஷ்ணவா பெண்கள் கல்லூரி போன்ற கல்லூரிகளில் சமூகப்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகள் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு களப்பணி அனுபவத்திற்காக ஆண்டுதோறும் வருவதுண்டு. இந்த ஆண்டு 12 மாணவ, மாணவிகள் களப்பணி அனுபவத்திற்காக வந்திருந்து பணியாளர்களுடன் இணைந்து சமூகப்பணியை ஆர்வத்தோடு கற்றுக்கொண்டனர். இவர்களின் சமூகப்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

# முடிவுரை:

2021 ஆண்டுகளுக்கு முன்பாக பாலஸ்தீன தேசத்தில் அடிமைப்பட்டிருந்த மக்களுக்கு தான் ஒரு தனி ஆளாக நின்று அன்று நிலவிய அடிமை தனத்திற்கு எதிராக குரல் கொடுத்து ஒரு பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தியவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. இப்போது நாம் தனிமனிதர்களாக அல்ல, குழுக்களாக, இயக்கங்களாக, சபைகளாக, இருக்கிறோம். இன்று நாம் வாழ்கின்ற சமூகத்தில் எத்தனையோ ஏற்றத்தாழ்வுகள், அநீதியான சமூக அமைப்பு முறைகள், ஏற்றத்தாழ்வுகள், ஒடுக்குமுறைகள், மரண ஓலங்கள், பசிப்பட்டினிகளைக் காண்கின்றோம். கடவுளின் பிள்ளைகள், நம்பிக்கையாளர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நாமும் இயேசுவைப்போல நம்மை அர்ப்பணித்து சமூக மாற்றத்திற்காக உழைக்க வேண்டும் அல்லவா? வாழ்விழந்தவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமல்லவா? ஆம்! நாம் அனைவரும் ஒரு புதிய சமுதாயத்திற்காக, ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்திற்காக அனைவரும் இணைந்து உழைக்க வேண்டும்.

செங்கல்பட்டு கத்தோலிக்க தலத்திருஅவையின் சமூக கரிசனைக்கான, சமூக நீதிக்கான, சமூக செயல்பாட்டிற்க்கான ஒரு அங்கமாக இருப்பது நமது செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம். கடந்த 31 ஆண்டுகளாக சமூகத்தில் மிகவும் பின்தங்கிய அடித்தட்டு மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், இயேசுவின் உரிமை வாழ்வுதரும் பணிகளை செய்துக்கொண்டு வருகின்றது. அதன் அனைத்து செயல்பாடுகளினாலும் ஏராளமான மக்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும் ஆன்மீகத்திலும் உயர்ந்துள்ளனர் விடுதலை வாழ்வை பெற்றுள்ளனர். இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

இந்நிறுவனத்தின் பல்வேறு வளர்ச்சிப்பணிகளில் உறுதுணையாய் இருந்து இந்நிறுவனத்தை வழிநடத்திவரும் நிறுவனத்தலைவர் **மேதகு.ஆயர். டாக்டர். நீதிநாதன்** அவர்களுக்கும், கடந்த 7 ஆண்டுகளாக இந்நிறுவனத்தின் துணைத்தலைவராக இருந்து இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை தொடர்ந்து ஊக்குவித்த **பேரருட்தந்தை. ஞா.பாக்கிய ரெஜிஸ்** அவர்களுக்கும், நம் நிறுவனத்தின் புதிய துணைத்தலைவராக பொறுப்பேற்றுள்ள **பேரருட்தந்தை. முனைவர். ஜான்போஸ்கோ** அவர்களுக்கும், **பொருளர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**, ஆயரின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், பங்கு அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், இலக்கு மக்கள், நன்கொடையாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட, கடைநிலையில் உள்ள மக்களுக்காக சமூக பணியில் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் எம் நிறுவன பணியாளர்கள் அனைவருக்கும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் இது நமது மறைமாவட்ட நிறுவனம், நமது மக்களுக்கான நிறுவனம். இதன் நிதிநிலை மிகவும் பின்தங்கி இருக்கின்ற நிலையில் அதை பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையச் செய்வது நமது கடமையாக இருக்கின்றது. எனவே அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், துறவற சபையினர், பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற ஆங்கில வழிக்கல்வி பள்ளி தாளாளர்கள் தாராளமாய் உங்கள் நன்கொடைகளை தாருங்கள், உங்கள் பள்ளியில், நிறுவனத்தில் உதவி செய்யும் நல்ல உள்ளங்கள் இருந்தால் எங்களுக்கு அறிமுகம் செய்து வையுங்கள். உங்களுக்கு தெரிந்த உள்நாட்டு, வெளிநாட்டு தன்னார்வத் தொண்டர்கள் அல்லது உபகாரிகளை ஊக்குவியுங்கள். நம் ஆயரோடு இணைந்து ஒன்றுசேர்ந்து, கரம்கோர்த்து இந்நிறுவனத்தை உயர்த்துவோம். பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைய இணைந்து செயல்படுவோம்.

**இறைவன் என்றென்றும் வாழ்த்தப்பெறுவாராக! ஆமென்**

# எங்களின் நன்கொடையாளர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள். . . . . .


**Chengalpattu Rural Development Society - CRDS**

No: 199A/4, Behind RC Cemetary, Thimmavaram
Kanchi High Road, Chengapattu Dt., - 603 101
Tamil Nadu, India

+91 9445586020
+91 6379493429

crdskanchigmail.com
crdschengai@rediffmail.com
www.crds.net.in

crds chengai | crdskanchi | Chengalpattururaldevelopment socity | CRDS DSSS | +919361131604

முன்னாள் நிறுவன துணைத் தலைவர்
பேரருட்தந்தை. ஞா. பாக்கியரெஜிஸ் அவர்களுக்கு
நெஞ்சார்ந்த நன்றிகள்!

புதிய நிறுவன துணைத் தலைவர்
பேரருட்தந்தை. **ஜான்போஸ்கோ** அவர்களை
அன்புடன் வரவேற்கின்றோம்!

# மனதார வாழ்த்துகிறோம்!

"சமுகவியல் பார்வையில் காஞ்சிபுரம் மாவட்ட தலித் கிறிஸ்தவர்களின் கல்வி நிலை – ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் தனது முனைவர் பட்ட ஆய்வுப் படிப்பை திறம்பட முடித்துள்ள நமது **இயக்குநர் தந்தை முனைவர் அருட்பணி. இ. அந்தோணிராஜ்** அவர்களை நமது நிறுவனத்தின் சார்பாக பாராட்டுகின்றோம். தந்தை அவர்களின் சமூகப் பணியும், ஆன்மீகப் பணியும், கல்விப் பணியும் சிறக்க மனதார வாழ்த்துகிறோம்!